விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 16 செவ்வாய்க்கிழமை (31.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 163

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து

## முப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு

# பொதுக் கட்டமைப்புக்குள் படைமுகாம்கள் அடங்காது!

(கொழும்பு)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்பின் வரையறைக்குள் படைமுகாம்கள், அதியுயர் பாதுகாப்பு வலயம் என்பன உள்ளடக்கப்படமாட்டாது. இந்த முடிபை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்துள்ளார்.**

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், முப்படைகளின் கட்டளையிடும் தளபதி தயா சந்தகிரி மற்றும் முப்படைத் தளபதிகளுடன் நேற்று முக்கிய சந்திப்பொன்றினை மேற்கொண்டார்.

இச்சந்திப்பின்போதே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

பொதுக்கட்டமைப்பால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பாதுகாப்புப் படைமுகாம்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாது என்று இச்சந்திப்பில் ஜனாதிபதி உறுதிபடத் தெரிவித்துள்ளதாக படைவட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

திருகோணமலைத்துறைமுகம், காங்கே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எஸ்.பிக்கு மன்னிப்பு வழங்க கால அவகாசம் தேவை

### மிலிந்தவிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசநாயக்காவுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் விடயம் குறித்து ஆராய தனக்குக் காலஅவகாசம் தேவைப்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

எஸ்.பி.திசநாயக்கவின் விவகாரம் குறித்து ஐக்கியதேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட, ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து உரையாடியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு தான் மன்னிப்பு அளிப்பதால் நீதிமன்றம் ஏதேனும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்குமா என்பது குறித்து தான்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கட்டமைப்பு உருவானால் அரசிலிருந்து ஜே.வி.பி வெளியேறும்

(கொழும்பு)

உத்தேச பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைச்சாத்திடமாட்டாதென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்துவதனை மக்கள் விடுதலை முன்னணி ஏற்றுக்கொள்ளாது என்றும், அதனையும்மீறி பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமானால் கூட்டணியிலிருந்து மக்கள் விடுதலை முன்னணி வெளியேறும் என்றும் அக்கட்சியின் அமைச்சர் அனுரகுமார திசாநாய்க்க தெரிவித்துள்ளார்.

வாரியபொல நகரில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் திசநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் இரண்டு பொதுக்கட்டமைப்புக்கள் உள்ளன. ஒன்று மக்கள் விடுதலை முன்னணிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலானது. மற்றையது ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்ப விடுதலைப் புலிக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லொறி – மினிபஸ் விபத்து; 7 பேர் காயம்

கைதடிப் பாலத்தருகில் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியும், கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ்ஸும் மோதி விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்து சம்பவத்தில் வாகனச் சாரதிகள் உட்பட ஏழுபேர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (8,19)

## ரூ. 5 கோடி வேலைத்திட்டம் பா. உறுப்பினர்கள் சமர்ப்பிப்பு

## சுனந்த தேசப்பிரியவின் சாரதி சுட்டுக்கொலை

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை வீரமுனைச் சந்தியில் நேற்று அதிகாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்றுக்காலை யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்திற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.க.கணேஷ், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமசந்திரன், ஈழவேந்தன், சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், கஜேந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோரது பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி கருதி ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் 50 லட்சம் ரூபா பெறு

(12 ஆம் பக்கம் பார்க்க)



வரமுனைச் சந்தியில் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சுதந்திர ஊடகத் துறையைச் சேர்ந்த சுனந்த தேசப்பிரியவின் வாகனச் சாரதி சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் குருநாகலைச் சேர்ந்த நாகூர் பிச்சை முஹமட் பௌசர் (வயது 23)என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட நபர் தனது நண்பருடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்க ஊழியர்களுக்கான கடன் ரூ.20 லட்சமாக அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்படவுள்ள கடன் தொகை 20 லட்சம் ரூபாவரை அதிகரிக்கப்படுமென பொதுநிர்வாக சபையின் செயலாளர் டி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 10 லட்சம் ரூபா கடனை வழங்குவதென தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் ஊழியர்களின் தேவைகருதி 20 லட்சம் ரூபாவரை அதிகரிப்பதென முடிவுசெய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கான ஆகக் கூடுதலான கடன்தொகை இதுவாகும். வீடொன்றையோ நிலத்தையோ கொள்வனவு செய்வதற்கு அல்லது வீட்டினை புதுப்பித்துக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக் கட்டமைப்பை விளக்க அமைச்சர் நியமிக்கப்படுவார்

புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் உத்தேச பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்னர் அது சம்பந்தமாக பாராளுமனறத்தில் எழும் பிரச்சினைகளுக்கு பதிலளிக்க சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அரச சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கு விடுதலைப் புலிகளும் தங்கள் சம்மதத்தை வழங்கியிருப்பதாக செயலக தகவல்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் பொதுக்கட்டமைப்பை கண்காணிக்கும் பொறுப்பையும் அந்த அமைச்சரிடம் கையளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொதுக்கட்டமைப்புக் குறித்து வாய் மூலம் பதிலை எதிர்பார்த்து பாராளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் பொறுப்பு அந்த அமைச்சருக்கு வழங்கப்படும். (ந)


EXPOAIR
your friend in the skies...



யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavj.com

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...




# மூச்சு விடுவதில் இடர்பாடு ஒரு முக்கியமான அறிகுறி

மூச்சுத்திணறல், மூச்சு முட்டுதல், இரைப்பு என தங்களின் சிரமத்தை கூறுவதைக் கேட்கிறோம். டிஸ்ப்னியா என்கிற இந்த அறிகுறி நுரையீரல், இதயம் சார்ந்த கோளாறுகளின் வெளிப்பாடு. இதனை அலட்சியம் செய்வது ஆபத்தாக முடிவதால், மருத்துவர்களும், நோயாளிகளும் உரிய சோதனைகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும். மேலும் மூச்சுத்திணறல் ஓய்வின்போதும் ஏற்படுமாயின் அதனை கவனத்துடன் கணகாணிக்க வேண்டும். சாதாரணமாக அன்றாட வீட்டு வேலைகளைச் செய்யும்போதே மூச்சு இரைப்பு ஏற்படுமாயின் அதற்குண்டான அடிப்படை காரணத்தை தெரிந்துகொண்டு உரிய சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். படுத்திருக்கும்போது மூச்சுத்திணறல் அதிகமாகி, உட்கார்ந்து கொண்டால் சற்று சிரமம் குறைவதுபோல இருக்கும் அறிகுறி **Orthopnoea** ஆபத்தானது.

மூச்சு இரைப்புடன் வரும் நோயாளியிடம் கேட்டறிய வேண்டிய அல்லது கண்டறிய வேண்டியவை சில. அவற்றில் முக்கியமானது எப்போது மூச்சுத்திணறல் உண்டாகிறது? திடீரெனவா? அல்லது மெல்ல மெல்ல படிப்படியாக உண்டாகிறதா, எவ்வளவு நேரத்திற்கு சிரமம் இருக்கிறது! வேலை செய்யும்போதா அல்லது ஓய்வில் இருக்கும்போதா? புகைபிடிக்கும் பழக்கம் உள்ளதா? தூசி, புகை, வாசனை, சீதோஷ்ண நிலை ஆகியவற்றால் தூண்டப்படுகிறதா? இதய நோய் உள்ளதா? இதய தசைகளில் வலி உள்ளதா? குழந்தைப் பருவத்தில் ருமாடிசம் பாதித்துள்ளதா? முட்டுகளில் வலி இருக்கிறதா என்பதை கேட்டு அறிய வேண்டும்.

இவற்றைத்தவிர வேறு அறிகுறி



களான காய்ச்சல், இருமல, சளி, எச்சிலில் இரத்தம், விசிங், தும்மல, மூக்கு ஒழுகல், சோகை, நகங்களில் பருத்ததன்மை (**Clubbing**) மூச்சுக்குழாயின் அடைப்பு, இதயத் துடிப்பு தன்மை ஆகியவற்றை அறிய வேண்டும்.

மூச்சு இரைப்பு ஏற்படக் காரணமாக பன்னிரெண்டு தன்மையை குறிப்பிடலாம். நிமோனியா, நுரையீரல், ஆஸ்த்மா, இதய ஆஸ்த்மா, மூச்சுக்குழாய் அடைப்பு, எம்பிசீமா, நிமோதோரக்ஸ், ப்ளூரல் எப்யூஷன், உடல் எடை அதிகரிப்பு, சோகை, மனத்தளர்ச்சி ஏனையவை என அவற்றைக் குறிப்பிடலாம்.

### நிமோனியா

நுரையீரலில் ஏற்படும் தீவிரமான அழற்சிகளில் ஒன்று நிமோனியா. இதில் மூன்றுவகைகள் உள்ளன. பொதுவாக காய்ச்சல், இதயத்துடிப்பு அதி கரிப்பு, அமைதியின்மை, நாக்கு விஷத்தன்மையுடன் காணப்படுவதுடன், மூச்சு விடுவதும் அதிகமாக இருக்கும். காய்ச்சல், நாடித் துடிப்பு விகிதம் சீரற்றுக் காணப்படும். சையனோசிஸ என்கிற நீலப்படலம் தென்படும்பாதிக்கப்பட்ட நுரையீரல் பகுதியில் அசைவு குறைவாக இருக்கும். மூச்சை உள்ளுக்குள் இழுக்கும போது வலியோ, இருமலோ தோன்றுவதுண்டு. பாதிக்கப்பட்ட நுரையீரல் பகுதி மீது விரல்களால் தட்டினால் ஓசை மெல்லவே தோன்றும். நுரையீரல ஓசை **Crepitati ons** நெறு நெறு ஒலி கொண்டு உள்ளதாக இருக்கும்.

### நுரையீரல் ஆஸ்த்மா

ஆஸ்த்மா என்று பொதுப்படையாகக் குறிப்பிடுவது நுரையீரல் சார்ந்த ஆஸ்த்மாவைத்தான். இதைத்தவிர இதய ஆஸ்த்மாவும் உள்ளது. மூச்சுவிடுவதில் சிரமம், இருமல், பரவலான வீசிங்ராங்கி என்று அழைக்கப்படும் சப்தம், ஈரமில்லாத சப்த ஒலி, பெரும்பாலும் காய்ச்சல் இருப்பதில்லை. வேறுதொற்று இருந்தால் மட்டுமே காய்ச்சல் தென்படும். ஆஸ்த்மா தொடர்ந்து நாட்கணக்கில் இருந்தால் தீவிரமான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில்

## மருத்துவ விளக்கம்

கவனிக்கப்படாத ஆஸ்த்மாவின் காரணமாக நுரையீரல் சுவர்களில் வெடிபபு உண்டாகி, அதன் நெகிழ்வுத்தன்மை சீரற்று நுரையீரல் விரிவுற்ற நிலை ஏற்பட்டுவிடும். இதனை **Emphysema** என்கிறோம். சிலர் ஆஸ்த்மாவுக்குக் காரணம் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களின் ஒருகூறான ஈசினோபிலியா என்று தவறாக நினைக்கின்றனர்.

### இதய ஆஸ்த்மா

இது இதய நோய்களினால் உண்டாகும். ஆஸ்த்மா அல்லது மூச்சிரைப்பாகும். இடதுபுற இதயச் செயலிழப்பு, ஈரிதழ் வால்வு, மகாதமனி வால்வுக் கோளாறு, நாள்பட்ட சீர்செய்யப்படாத உயர் இரத்த அழுத்தம், நுரையீரல் நீர் தேக்கம் ஆகிய காரணங்களால் இது தோன்றுகிறது. இந்த மூச்சிரைப்பு இரவில் தான் தோன்றுகிறது. இருமல், நீர் போனற சளி நுரையீரல் அடிப்பகுதியில் எலும்பு முறிவது போன்ற ஒலி, நன்றாக புலப்படுவது தோன்றுகிறது.

இடப்புற இதயத்தோடு வாய்ப்புற இதயமும் பாதிக்கப்படும் போது, கல்லீரல் வீக்கமடைந்து பருத்துவிடத் தொடங்குகிறது. இதனால் மகோதரம், கால்களில் நீர் தேங்கி வீக்கம் உண்டாகிறது. இதய முணுமுணுப்பு ஓசையுடன் மாரடைப்பிற்கான அறிகுறி கொண்ட இதய மின் அலைகள் தோன்றுவதை இ.சி.ஜியில் காணமுடிகிறது.

### மூச்சுக்குழாய் அடைப்பு

மூச்சுக்குழலில் அடைப்புகள் ஏற்படுவதால் திணறல் உண்டாகிறது. குழந்தைகள் பட்டாணி, கடலை, கோலிகுண்டு, காசு ஆகியவற்றை விழுங்கி அது மூச்சுக் குழாயில் சிக்கிக் கொள்வதுண்டு. ஒருமுறை முதியவர் ஒருவரின் பல் செட் மூச்சுக்குழாயில் சிக்கிக்கொள்ள திணறலோடு வந்தார். இதைத்தவிர நுரையீரல் குழல்களில் உள்ள பிரிவுகளில் ஏற்படும் தொற்றுகளாலும் அடைப்பு ஏற்படுவதுண்டு.

### அதிக எடை

உடல் எடை அளவுக்கு அதிகமாக பெருத்து விடுவதாலும் மூசசுத்திணறல் ஏற்படுகிறது. ஊளைச்சதையை குறைக்க உரிய பயிற்சிகளையும், உணவு முறைகளையும் கையாளவேண்டும்.

### மனத்தளர்ச்சி

பிறரின் கவனத்தைக் கவர்ந்து அனுதாபம் பெற குறிப்பாக பெண்கள் தாங்களாகவே ஏற்படுத்திக் கொள்ளும் அறிகுறியாகவும் மூச்சுத்திணறல் இருக்கிறது.

### சோகை

இரத்தசோகை என்பது பெரும்பாலான பெண்களை அதிகம் தாக்கும ஒரு அறிகுறியாக உள்ளது. இது அறிகுறி என்று குறிப்பிடக் காரணம் மூலத்தை அறிய வேண்டும் என்பதால்தான். ஒரு பெண் ணுக்கு மாதவிடாயின்போது இரத்தப்போக்கு அதிகமாக இருக்கலாம். மூலநோய் காரணமாக இரத்தம் வீணாகலாம். அல்லது குடலில் பூசசிகள் இருக்கலாம். வயிற்றுப்புண, தாலஸீமியா போன்றவை இருக்கக்கூடும். போதுமான சத்தான உணவு இல்லாமலும் போகலாம். எனவே ஹீமோகுளோபின் அளவையும், சிவப்பு இரத்த அளவையும் அறிந்து அதற்குத் தக்கபடி சிகிச்சையைப்பெற வேண்டும். சோகையைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் பின்பு இதயச் செயலிழப்பு ஏற்பட்டு விடுகிறது.

**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்**

மூச்சு இரைப்பு என்பது அவசரமான சிகிச்சைக்கான ஒரு அபாய அறிவிப்பு என்பதை உணர்ந்து, அலட்சியம் செய்யாமல் மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.□

## இராசி பலன்

31.05.2005
(வைகாசி 17, செவ்வாய்க்கிழமை)
அட்டமி முற்பகல் 8.29 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 4.14 மணிவரை
இராகுகாலம் : 2.52 - 4.22 மணிவரை
சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை
அட்டமி, நவமி

| | |
|---|---|
| மேடம் | உணர்ச்சி வசப்படுதல், சுபசெலவு, காரிய தாமதம், சயனசுகக்குறைவு. |
| இடபம் | கீர்த்தி, எடுத்த காரியம்கைகூடும், பண வருவாய், குடும்பமகிழ்ச்சி. |
| மிதுனம் | அதிகாரம், தூரதேசச் செய்தி, சுப நிகழ்வு, உற்சாகம். |
| கடகம் | ஆன்றோர் மதிப்பு, உடலுழைப்பு, வீண் பயம், கட்டுப்பாடு. |
| சிங்கம் | வீண்தொல்லை, போசனசுகம், காரிய தடங்கல், பிரயாண பயம். |
| கன்னி | திடீர் பயணம், அபூர்வசந்திப்பு, காரிய அனுகூலம், புதிய திட்டம். |
| துலாம் | சத்துருஜெயம், தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், தேகநலன். |
| விருச்சிகம் | வியாபாரநன்மை, காரிய இடையூறு, மனச்சஞ்சலம், கௌரவக்குறைவு. |
| தனுசு | பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, ரோகநிலை. |
| மகரம் | இனிய அனுபவம், காரிய அனுகூலம், சகோதரர் உதவி, பணவருவாய். |
| கும்பம் | மனச்சஞ்சலம், காரிய அலைச்சல், பண விரயம், மாதர் நட்பு. |
| மீனம் | நல்லமுயற்சி, ஆழ்ந்த சிந்தை, புதிய பொருள் சேர்க்கை, சயனசுகம். |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

-வளவன்

# மக்களுக்கு யதார்த்தத்தை புரியவைக்க வடமராட்சியில் செயலணி உருவாக்கம்

சிறிலங்கா அரசினால் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 3 வருடங்கள் கடந்த நிலையில் தமிழ் மக்களுக்கு அரசினால் எந்தவித உருப் படியான திட்டங்களோ தீாவுகளோ கிடைக்காதநிலையில் தொடர்ந்தும் நாம் அவை கிடைக்கும் என்று எண்ணி ஏமாற்றமடையாது உடன் நாமும் எங்களைத் தயார்ப் படுத்திக்கொள்ள வேண்டும்.

அரசு சமாதானம் என்று கூறிக் கொண்டு மறை முகமாக யுத்தத்திற்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட் டுவருகிறது. இந்த சிங்கள அரசிடமிருந்து எமது உரிமையை சுலபமாக பெற்றுவிடமுடியாது என்ற யதார்த்தத்தை மக்களிடம் சென்று எடுத்துக்கூற செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த 28ஆம் திகதி காலை 10 மணியளவில் நெல்லியடி முருகன் திருமணமண்டபத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாச செயலாளர் க.சூரியகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், சுனாமி அனர்த்த செயலணிப் பொறுப்பாளர் பாலைய்யா, யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தேசிய எழுச்சிப் பேரவையினர், கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள் என சுமார் 150 இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இதில் 12 விடயங்கள் சார்பாகக் கருத்தரங்குகள் நடாத்த தீர்மானிக்கப்பட்டு கருத்தரங்குகளை நடாத்த பேச்சாளர்கள் பலர் நியமிக்கபட்டனர். இப் பேச்சாளர்கள் பொது இடங்களில் மக்களை ஒன்று திரட்டி தற்போதைய அரசியல் நிலவரங்களையும் நாம் எடுக்க வேண்டிய வேலைததிட்டங்களையும் எடுத்துக்கூறவுள்ளனர். இவ் விழிப்புணர்வு பிரசார வேலை முதன முதலாக வடமராட்சியில் ஆரம்பித்து பின்னர் குடாநாட்டின் சகல பகுதிக்கும் விரிவுபடுத்தவுள்ளதாக கூட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ-101)

# 1000 வீடுகளை அமைக்க அமெரிக்கா தயார்

(கொழும்பு)

சுனாமியின் போதும் நின்று நிலைக்கக்கூடிய வீடமைப்புத் தொகுதியொன்றை இலங்கையில் அமைப்பதற்கு அமெரிக்கா தயாராகி வருவதாகவும் இந்தத் திட்டத்தின் கீழ் ஆயிரம் வீடுகள் அமைக்கப் படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் 'நிக்கோசொற்' தொழில்நுட்ப நிறுவ்னம் இந்த வீடமைப்புத் திட்டத்திற்கான வீடுகளை வடிவமைப்பு செய்துள்ளது.

இலங்கையில் அமைக்கப்படும் மரபு ரீதியான வீடுகளைவிட இந்த வீடுகள் பன்மடங்கு உறுதிவாய்ந்தது என்று 'நிக்கோசொற்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கமைய வீடொன்றினை அமைப்பதற்கு ஒன்று தொடக்கம் ஒன்பது இலட்சம் ரூபாவரை செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கடற்கரையோரமாக மக்களைக் குடியமர்த்துவதில் அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடு காரணமாக சுனாமிக்கும் நின்று நிலைக்கக்கூடிய வீடுகளை அமைப்பதில் தாம் பிரச்சினைகளை எதிர் நோக்குவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. (து-9)


## சிறு விளம்பரம்

**மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்மநாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்ததிகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர வடயங்கள். விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலா பலன்களை அறிந்து கொள்ள தொடர்புகளுக்கு, ஹோட்டல் பிள்ளையார் இன்
அறை இல.09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 -
இரவு 8.30 வரை (9579)

## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கோவியர் 1972 புநர்பூசம் மிதுனராசி 32 ¼ பாபம் 5' 4" உயரம், **B.com, CIMA** அரச பணியில் உள்ள பட்டதாரிக்கும் 1970 மகம் சிம்மராசி 12இல் செவ்வாய் 50 பாபம் 5'6 "உயரம், **B.Sc., M.Sc.** பட்டதாரி ஆசிரியருக் கும்,

1968 அவிட்டம் மகரராசி 07 பாபம 5'5" உயரம், **B.Sc.** பட்டதாரி அரச பணியில் உள்ள மணமகன்களுக்கு அரச பணியில் உள்ள அழகான மணமகள் தேவை.தொடர்பு சிவாலயா சர்வதேச திருமண நிலையம் 68/15 சட்டநாதர் வீதி, நல்லூர். **T.P.**021 222 7844 (9580)

## மணமகள் தேவை

யாழ்.இந்து குருகுலம் 1973 கேட்டை விருச்சிகராசி 8ல் செவ்வாய 39 ¼ கிரக பாபம் 5' 3" உயரம், **B.Com.(Spl.)** ஆசிரியருக்கும் 1975 அச்சுவினி மேடராசி 5' 4" உயரம், 12இல் செவ்வாய் **G.C.E O/L** அரச அலுவலக பணியாளர் மணமகனுக்கும் தகுதியான மணமகள் தேவை. வெளிநாடும் விரும்பத்தக்கது. தொடர்புக்கு, சிவாலயா சர்வதேச திருமண நிலையம், 68/15 சட்டநாதர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

**T.P** 021 222 7844 (9580)


## சைவப்புலவர் தேர்வு

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் சைவப்புலவர், இளஞ சைவப்புலவர் தேர்வுகள் எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது.

இம்முறை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களுக்கு மட்டும் இப்பரீட்சை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.அனுமதி அட்டைகள் தபாலில் அனுபபிவைக்கப்பட்டுள்ளது. இவை கிடைக்காதவர்கள் தேர்வுச்செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ற)

## இன்று ஒரு தகவல்

# பாதுகை

சார்! புராண விஷயங்களைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கும் போது விஞ்ஞானக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு அதைக் கேட்க முயற்சி செய்வது தவறு.அதனால் அப்படி யாராவது போட்டுக் கொண்டிருந்தால் அதைக் கழற்றி வைத்து விட்டு ஆன்மீகக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு அதன்பின் இதைக் கேளுங்கள் அப்போதுதான் குறுக்குக் கேள்வி கள் கேட்காமல் நீங்கள் இதைக் கேட்க முடியும்.

வைகுண்டத்தில் ஒருநாள் திருமால் வழக்கத்திற்கு மாறாக ஒரு காரியம் செய்தார். தன்னுடைய பாது கையை பள்ளியறைக்குள் விட்டு விட்டுப் பாம்பணையில் படுத்துவிட்டார். உடனே அவருடைய திருமுடிக்குக் கோபம் வந்துவிட்டது. முடி பாதுகையெல்லாம் தவம் செய்து அந்த பதவியை அடைந்திருக்கிறதாம்.

திருமுடி பாதுகையைப் பார்த்து சத்தம் போட ஆரம்பித்துவிட்டது. “ஏ பாதுகையே! உனக்கு அறிவு இருக்கிறதா? கண்ட கண்ட இடத்தையெல்லாம் மிதிக்கும் நீ இப்படி படுக்கையறைக்குள் வரலாமா? போ வெளியே என்று கத்தியது.பாதுகை இதற்குப் பணிவாக பதில் கூறியது. திருமுடியே! நீ கூறுவது சரிதான். இருந்தாலும் நானாக இந்த இடத்திற்கு வர்வில்லை பகவானுடைய திருவடி தான் என்னை இங்கே கொண்டு வந்து உள்ளே விட்டது. அப்படி இருக்கும்போது வீணாக என்னை ஏன் கோபித் துக் கொள்கிறாய்? எய்தவன் இருக்க அம்பை நோக லாமா? இது சரியா?” என்றது.

இதைக் கேட்டதும் திருமுடிக்கு இன்னும் கோபம் வர ஆரம்பித்துவிட்டது. பாதுகையே! நீ மிகவும் அதிகமாகப் பேசுகிறாய். நீ மிகவும் இழிவான பொருள். நீ இவ்வளவு தூரம் பேசக் கூடாது. இங்கே உள்ளே இருப்பதற்கு உனக் குத் தகுதியே இல்லை. நான் பெருமானுடைய தலைக்கு மேல் இருப்பதற்குத் தகுதி உடையவன். என்னுடன் சரி யாக நின்று பேசுவதற்குக் கூட உனக்குத் தகுதி கிடை யாது. அதனால் இங்கே இருக்காதே! சீக்கிரம் போய்த் தொலை” என்றது.

முடியே! எதற்காக இப்படி வீணாக பெருமையடித்துக் கொள்கிறாய? எனக்கென்று தனியாக ஒரு செயலும் கிடையாது தான். நான் எப்போதும் ஐயன் திருவடியை ஒட்டிக்கொண்டிருப்பவன்.அந்தப் பாதத்தை நம்பிய வர்களுக்கு நல்லது நடக்கும். அடியார்கள் எல்லோரும் அடியைத்தான் விரும்புகின்றனர். “அடிசேராய் என்று தானே பாடுகிறார்கள். அதனால் என்னை இப்படிப் பழித் துப் பேசாதே” என்றது பாதுகை.

இவ்வளவு நேரமும் இந்த விவகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சங்கும் சக்கரமும் திருமுடியின் பக்கம் சேர்ந்து கொண்டு பாதுகையை விரட்ட ஆரம்பித்துவிட்டது. எப்போதும் உயரத்திலிருப்பவர்களுக்குத்தான் சலுகை அதிகம். “உனக்கென்ன இவ்வளவு திமிர்? பேசாமல் வாயை மூடிக்கொண்டு வெளியே போகிறாயா?”என்று கத்தின.

பாதுகையின் நிலைமை பரிதாபமாக இருந்தது. உடனே நாராயணனைப் பார்த்து “கருணைக்கடலே நீங்களே என்னை இப்படி உள்ளே கொண்டு வந்து விட்டுவிட்டு இவர்களை இப்படிப் பேசச்செய்வது சரியா?” என்று முறையிட்டது. திருமால் உடனே “பாதுகையே நீ கவலைப்படாதே” என்று கூறிவிட்டு முடியைப் பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார். முடியே! நீ தற்பெருமையாகப் பேசி இந்தப் பாதுகையை அவமானப்படுத்திவிட்டாய்! அதனால் அடுத்துவரும் இராமாவதாரத்தில் 14 வருடம் இந்தப் பாதுகையின் மேல் நீ இருக்கக்கடவது. சங்கு சக்கரமே நீங்களிருவரும் என் கண் முன்னாலே பாது கையைப் பழித்துப் பேசிவிட்டீர்கள்.அதனால் இராமாவ தாரத்தில் நீங்கள் இருவரும் சத்ருக்கனாகவும் பரதனாக வும் பிளந்து இந்தப் பாதுகையை 14 வருடங்கள் வழிபடக்கடவது” என்றார்.

அதனால் தான் 14 வருடம் பாதுகைக்கு முடிசூட்டி பரதர் விரதம் இருந்து பாதுகையைப் பூஜித்துவந்தார். “கீழோராயினும் தாழவுரை” என்பது இதன் விளக்கம். சிறியோர் தானே என நினைத்து யாரையும் இகழக்கூடாது என்பது தான் நாம் இதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது. பாதுகையைப் பற்றி நான் உங்களுக்குத் தகவல் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படிச் சொல்லி முடிப்பதற்குள் என்னிடம் ஒருவர் பேச ஆரம்பித்தார்.

‘நீங்கள் சொல்வதுதான் சரி! இருந்தாலும் நான் உங்களைத் தேடிவந்தது வேறு விடயம். அதுவும் பாதுகை சம்பந் தப்பட்ட விடயம் தான். நேற்று நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்து விட்டுத் திரும்பும் போது உங்கள் பழைய செருப்பை விட்டு விட்டு என்னுடைய புதிய செருப்பைப் போட்டுக் கொண்டு வந்து விட்டீர்கள்.


உங்களுடையதை மிகவும் பக்தி பூர்வமாக அங்கேயிருந்து சுமந்து கொண்டு வந்திருக்கிறேன். ஏனென்றால் காலில் மாட்ட முடியவில்லை! காதறுந்துவிட்டது. சார் நான் பரதன் இல்லை ஒரு பாமரன் தயவு செய்து என்னுடையதை என்னிடம் தந்துவிடுங்கள் சார்” என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமே

(கொழும்பு)

**ரணில் விக்கிரமசிங்க**



நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக ஜனாதிபதி தேர்தல் நடத்த வேண்டுமென்றும் தற்போதுள்ள அரசாங்கத்தை அகற்றுவதன் மூலமே நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளதினால் மக்கள் வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுளளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டங்கள் ஏதும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

விவசாயிகளை பாதுகாப்பதாக வாக்குறுதி அளித்து பதவிக்கு வந்த அரசாங்கம் இனறு அவர்களை தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதன் மூலம் மக்கள விருபபமான அரசாங்கமொன்றை தெரிவு செய்துகொள்ள முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிததுள்ளார். (ந-9)

# வட-கிழக்கு தமிழர் தாயகத்தில் சுகாதார மேம்பாடு அவசியம்

(கிளிநொச்சி)

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தென்னிலங்கையில் உள்ள சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது யுத்தத்தினைத் திணித்து வந்தது.

ஆயுத தாக்குதல்களால் மட்டுமல்ல தமிழ் மக்களை எப்படியெல்லாம் அழிக்க முடியுமோ அதற்கான சகல வழிகளையும் அது பின்பற்றியிருந்தது என தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவிததுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வடக்கு-கிழக்கு சுகாதார அபிவிருத்தி தொடர்பான கலநதுரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிககும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த இரு தசாப்த காலப்போரின் காரணமாக மிகவும பின்தங்கிய நிலையில் வடக்கு-கிழக்குப் பகுதிகள் உள்ளன. சுகாதார நிலைமைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம் தற்காலிக அமைதிச் சூழலை உருவாக்கியது.

போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாத சூழலில் இருந்தோம். தற்போது நிலவுகின்ற அமைதிச சூழலில அவற்றை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளோம்.

வடக்கு-கிழக்கு தாயகப் பிரதேசத்திலே சுகாதார மேமபாட்டினையும் அதற்கான வசதிகளையும் தென்னிலங்கையைப் போல் தமிழர் தாயகப் பகுதிகளில திட்டமிடல்களும் செயற்பாடுகளும் ஒழுங்குபடுத்தப்படடு பேணப்பட வேண்டும் என்ற தேசியத் தலைவரின உயரிய சிந்தனையின் செயல்வடிவமாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு தாயகப் பிரதேசத்தில் சுகாதார மேமபாடுகள் அனைத்தும் மிகவும் பின்தங்கிய நிலையில் தான் உள்ளன. இத்துறைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும் எனவும அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோரின் விபரங்களைத் திரட்ட அரசு நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில தங்கியுள்ளவர்கள் தொடர்பான விபரங்களைக் கண்டறிவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றில குடியேற அவர்கள் செல்வதில்லையென்றும் அத்தியவாசிய சேவைகள் ஆணையாளர் திலக்ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

சில குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வீடுகளிலும் நலன புரி நிலையங்களிலும் மாறி மாறி இருந்து வருவதாக தகவல கிடைத்துள்ளதாகவும் இதனாலேயே நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்கள் தொடர்பான விபரங்களைக் கண்டறிவதற்குத் தீர்மானித்துள்ள தாகவும அவர் தெரிவித்தார்.

இதனைக் கண்டறிய விசேட மதிப்பீட்டு நடவடிககைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுனாமியினால பாதிககபபட்ட 45ஆயிரம் பேர் வரை நலன்புரி நிலையஙகளில் தற்போதும் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

# சிவராமின் நினைவை முன்னிட்டு கொழும்பில் அமைதி ஊர்வலம்

(கொழும்பு)

கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் ஒரு மாத நினைவை முன்னிட்டும் அவரது கொலையைக் கண்டித்தும் நேற்று முன்தினம் கொழும்பில் அமைதி ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது.

இவ் அமைதி ஊர்வலம் நாடாளுமன்ற சுற்று வட்டத்திலிருந்து .ஆரம்பமாகி யப்பான் நட்புறவுப் பாலம் வரை நடைபெற்றது.கடும் மழை பெய்து கொண்டிருந்த போதும் அதனைப் பொருட்படுத்தாது தமிழ்,சிங்கள,ஆங்கில ஊடகவியலாளர்கள் உட்பட பலர் ஊர்வலத்தில் பங்கு கொண்டனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் தமது வாய்களை கறுப்புத் துணியால் கட்டியவாறு ஊர்வலத்தில் கலந்து கொணடனர். ஊர்வலத்தின் முடிவில் சிவராம் கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட யப்பான் இலங்கை நட்புறவுப் பாலத்திற்கு அருகில் சிவராமின் உருவப் படத்தினை வைத்து மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இவ் அமைதி ஊர்வலத்தை ஊடக நிறுவனங்கள், பொதுஜன அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்பன ஏற்பாடு செய்திருந்தன. (ச-8)

# தரம்-I மாணவர் அனுமதி; விண்ணப்பிக்க காலக்கெடு நீடிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளில் அடுத்த ஆண்டு முதலாம் தரத்தில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள எதிர்வரும் ஜூலை மாத முற்பகுதியில் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இதற்கான சுற்றுநிருபம் ஒன்று அடுத்த வாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படுமென்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

வழமையாக மாகாண நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளுக்கு முதலாம் தரத்தில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 30 ஆம திகதிக்கு முன்னதாகக் கோரப்படடது. எனினும் இந்தத் தடவை இந்தக் காலக்கெடு ஒரு மாதத்தினால் நீடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.என். குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டிலுள்ள தேசியப் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்தில் மாணவர்களைச் சோததுக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன.

தேசியப் பாடசாலைகளில் அனுமதி பெறத் தவறிய பிள்ளைகளின் பெற்றோர் ஏனைய பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு வசதியளிக்கும் முகமாகவே மாகாணசபை நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளுக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் திகதி பிற்போடப்பட்டுள்ளதாக குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (ந-9)

# வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்

**ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதி**

(கொழும்பு)

அரசாங்கம் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டாலும அல்லாவிடினும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிககு மனிதாபிமான உதவிகள் தொடர்ந்து அனுப்பப்படும் என இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதி அலக்ஸான்ரா பியோ தெரிவித்தார்.

கண்டி மாநாட்டில் உறுதியளித்ததன் படி அரசாங்கம் மேற்படி உதவிகள் வழங்குகின்றதா என்பதை சர்வதேச சமூகம உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் பொதுக் கட்டமைப்பு ஏற்படினும் அல்லாவினும் உதவிகள் குறித்த இடங்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்தும் என்றும் தெரிவித்தார். அத்துடன் நிதியும் வடகிழக்கு தெற்கு என பாரபட்சம் இன்றி சென்றடைவதை உறுதிப் படுத்தும் என்றும் கூறியுள்ளார். (ச-6)

# மோ.சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு மதவடிச் சந்தியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பலாலி வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் வாகனமொன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது யாழ்ப்பாணவதியூடாக வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே மோட்டார் சைக்கிள்களை ஓட்டிவந்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-130)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 7



The time has come for the whole Sinhalese race, which has existed for 2500 years Jealously safeguarding their Language and religion to fight without giving quarter to save their birth right "நேரம்வந்துவிட்டது. 2500 வருடங்களாக நிலைத்திருந்த பெருமையோடு தங்கள் மொழியையும், மதத்தையும் பேணிப் பாது காத்து வந்த முழுச் சிங்கள இனத்துக்கும் ஒரு அணுவளவு தானும விட்டுக் கொடுக்காமல் தமது பிறப்புரிமையைப் பாதுகாக்கப் போராடு வதற்கு வேளை வந்துவிட்டது"

ஜே.ஆர். ஜெயவர்ததனாவின இக்கூற்றை ஒத்ததாகவே டெய்லி நியூஸ் பத்திரிகையின் கருத்தொன்றும் இருந்ததெனலாம்.

"சிங்களவராகிய எம் உடலில் ஓடுவது ஒரே குருதி. நாம் ஒரே இனத்தவர். நாம் தனிச்சிறப்புள்ள மக்கள். 5500 ஆண்டுகளுக்குத் தன் மதம் நிலைக்குமென்று புத்தர் கூறினார். புத்தமதத்தின் பாதுகாவலர்கள் என்ற முறையில் நாமும் அதே அளவு காலம் நிலைத்து வாழ்வோம்"

இப்படியான கருத்துக்கள் மூலம் சிங்கள-பௌத்த மேலாதிக்க உணர்வு நிலை நிறுத்தப்பட்டமையை நாமறிந்து கொள்ளலாம். தமிழர் தமது 'பாரம்பரியப் பிரதேசங்கள்' பற்றி உரிமைக்குரல் எழுப்புவதற்கு எதிரானதாகவும் அதைத் தடுத்து நிறுத்திப் பிரிவினைக் கோரிக்கைக்கு எச்சரிக்கை விடுப்பதாகவும் பல முயற்சிகள் அமைந்துள்ளன. "சிங்களப் தமிழ்ப் பகுதிகளென இலங்கை இரண்டாகப் பிரிக்கப்பட்டால், சேருவில தீகவாபி, கிரிவிகாரை, நாகதீபம் போன்ற பண்டைய பௌத்தத் தலங்களும் காடுகளால் மூடப்படாத ஏனைய வழிபாட்டுத் தலங்களும் தமிழருடைய கைக்குப் போய்விடும்"

இவ்வாறு விடுக்கப்பட்ட எச்சரிக்கை எவ்வுணர்வுகளை இலங்கை அரசியலில் எதிரொலித்திடும் என்பது உணரற்பாலதேயாகும். பௌத்த சிங்கள பேரினவாதத்தின் போக்கினுக்குப் பாடநூல்களும் கூடப் பலியாகிடத் தவறவில்லை. இளஞ் சிறார்களின் உள்ளங்களில் இந்த மேலாண்மையுணர்வு இவற்றினால் பதிய வைக்கப்படுவதாகவே கருத வேண்டும்.

இந்நாட்டில் எவருக்குமே மேலாண்மை உரிமை கிடையாதென்பதையும் இது ஓர் பல்லின மக்கள் வாழும் நாடு என்னும் உணர்வே மேலானது என்பதையும் "சிங்களம்" என்னும் பதம் தொடர்பாகக் கூறிய தமது கருத்தொன்றினூடாக சி.க.சிற்றம்பலம் அவர்கள் புரியவைத்துள்ளார்.

"இந்நாட்டில் "சிங்களம் எனப்பட்ட பதம் நாட்டுக்கோ அன்றி மக்கட் கூட்டத்தினருக்கோ கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வழக்கிலிருக்கவில்லை என்பது வரலாற்று உண்மை. அப்படியாயின் கி.பி.2ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற துட்டகைமுனு-எல்லாளன் போராட்டத்தை தமிழ்-சிங்கள இனப் போராட்டம் என வரலாற்றாசிரியர் சிலர் திரித்துக் கூறுவதோ அன்றித் தமிழ் பேசும் மக்கள் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பு ஈழத்தில் செறிந்து வாழ வில்லையெனக் கூறுவதோ தவறாகும். "சிங்களம் இந்நாட்டுப் பெயராகவே சிலப்ப திகாரம் போன்ற இலக்கியங்களிலும் இந்தியக் கல்வெட்டுக்களிலும் கி.பி. 3ஆம், 4ஆம் நூற்றாண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கி.பி.6 ஆம் நூற்றாண்டளவில்தான் "சிங்கள" நாட்டில் வசித்த "சிங்களவரை"க் குறித்ததெனலாம். ஏன் பிராமிக் கல்வெட்டுகளில் கூட சிங்களம் என்ற சொல் காணப்படவில்லை. உண்மையில் வட நாட்டிலிருந்து மகாவம்சம் கூறுவதுபோல் சிங்கள மக்கள் இந்நாட்டில் குடிபுகுந்து இருந்தால் அப்பெயர் ஓரிடத்தி லாவது காணப்படல் வேண்டும். இவ்வாறு காணப்படாதது விந்தையாகவே இருக்கிறது. ஆனால் இதற்குப் பரணவித்தான இந்நாட்டில் யாவரும் சிங்களவராக இருந்ததால் 'சிங்களம' என்ற ஓர் இனம் பற்றிய குறிப்பு இக்கல்வெட்டுகளில் காணப்படவில்லை எனக் கூறும் சமாதானம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை"

எனக் குறிப்பிடுவதன் மூலம் பிழையான ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்டோரது தவற்றினைச் சுட்டிக்காட்டுகிறார்.

இதேபோன்று பல்வேறு நடவடிக்கைகளிலும் சிங்கள-பௌத்தத்தின் ஆக்கிரமிப்புக்களை நாம் உணர்ந்து கொள்ளக்கூடியதாய் உள்ளது. வரலாற்றினூடாக உண்மையை அறியும் தூய்மையான நோக்கத்தினைக் கைவிட்டு வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி அதனடிப்படையில் ஐதீகங்களுக்கெல்லாம் உண்மைத் தன்மையயளிக்கும் மனப் பாங்கினை எம்மால் இனங்காணமுடிகிறது. பிற்போக்கான இத்தகைய இனவாத சிந்தனை களை பிபன் சந்திரா "கடந்த நூறு ஆண்டுகால வரலாற்றுப் போக்குகளின் தவறான சிந்தனை" எனத் தாமெழுதிய நூலொன்றில் குறிப்பிட்டுள்ளமை நோக்குதற்குரியதாகும்.

### சட்டரீதியான அரசாங்கச் செயற்பாடுகள்

இலங்கையில் சிங்கள-பௌத்த மேலாதிக்க உணர்வினை வெளிக்கொணரும் வண்ணமாகக் காலத்துக்குக் காலம் ஆட்சிசெய்த அரசாங்கங்களின் சட்டரீதியான செயற்பாடுகள் விளங்கி வந்துள்ளன. சிறுபான்மையினங்களுக்கு எதிராகவும் அவர்களது அபிலாஷைகளுக்குப் பாதகமாகவும் ஒருதலைபட்சமாக அரசாங்கங்களில் தங்களுக்குச் சாதகமாக அமைந்துள்ள பெரும்பான்மைப் பலத்தினைத் துணையாகக் கொண்டு பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. அத்தகைய சட்டரீதியிலமைந்த அமுலாக்கல்கள் பலவும் தேசிய இனங்களுக்கிடையேயான நம்பிக்கையைச் சிதறடிக்கவும் ஒற்றுமையைப் பலவீனப்படுத்தவும் முரண்பாடுகளை நிறுவன ரீதியாக மென்மேலும் வளர்த்துச் செல்லவும் கலவரங்களும் ஒடுக்குமுறைகளும் தோற்றம் பெறவுமே வழிசமைத் தனவெனில் மிகையாகாது.

பிரித்தானியராட்சிக்கெதிரான தேசியக் கிளர்ச்சிகளில் இலங்கையர் அனைவரும் ஆரம்பத்தில் ஒன்றுபட்டே குரல் கொடுத்தனர். வடக்கில் ஆறுமுகநாவலரின் தமிழ் சைவ மறுமலர்ச்சியியக்கமும், தெற்கில் அநகாரிக தர்மபாலா போன்றவர்களின் சிங்கள- பௌத்த மறுமலர்ச்சி இயக்கமுங் கூடத் தேசிய சிந்தனைகளையேயூட்டி வளர்த்தன. இருந்தும் சிங்கள-பௌத்த விழிப்புணர்வானது ஏனைய தேசிய இனங்களுக்கெதிரானதாக வடிவமாற்றம் பெற்றமை கசப்பானதாகும். பிரித்தானியருக்கெதிரே சுதந்திரம் பெறத் துடிக்கும் இலங்கையரின் நிலைப்பாடு குறித்துப் பின்வரும் அ.சிவராசாவின் கருத்து தெளிவாக எடுத்துக்காட்டுகிறதெனலாம்.

"உள்ளூர் உயர் மத்திய வர்க்கம் தலைமைதாங்கிப் பிரித்தானிய ஆட்சிக்கெதிராகச் சீர்திருத்தம் கோரி நடத்திய கிளர்ச்சிகள், 1912 இல் அமைக்கப்பட்ட தேசிய சங்கம் 1917 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைச் சீர்திருத்தக் கழகம் என்பவற்றினூடாக வெளிப்பட்டன. இவ்விருவியக்கங்களும் ஒன்றிணைந்து உருவாக்கியதே இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஆகும். இலங்கை மக்களுக்குப் பொறுப்பாட்சி பெற்றுக் கொடுப்பதும் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் இலங்கை சுயாட்சி செலுத்தும் ஓர் அங்கத்துவ நாடு என்ற அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதுமே இலங்கைத் தேசிய காங்கிரஸின் இலக்காக இருந்தது".

(தொடரும்)

# 'ராவய' ஆசிரியருக்கு கொலை மிரட்டல்

(கொழும்பு)

ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவனுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கபபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாகக காலியில் அமைந்துள்ள விக்டர் ஐவனின் வீட்டுக்கருகில் துப்பாக்கிதாரியொருவர் நடமாடியது தொடர்பில் வெளியாகியுள்ள தகவல்களை விக்டா ஐவனின் வீட்டாரும் அப்பிரதேச வாசிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளா மாமனிதர் சிவராமின் நினைவு நிகழ்வு ஒன்றிலும் விக்டர் ஐவன் பங்கேற்கவில்லையெனத் தெரிகிறது.

இதுவிடயம் பற்றி தேசிய, சர்வதேச ஊடக பாதுகாப்பு அமைப்புகளுக்கு முறையிட்டுள்ளதாகக் கூறிய விக்டர் ஐவன் பொலிஸாருக்கு முறைப்பாடு எதனையும் செய்யவில்லையென்றும், இலங்கைப் பொலிஸாரில் தமக்கு நம்பிக்கை இல்லாமையே இதற்குக் காரணமென்றும் தெரிவித்துள்ளார். (து-8)

# நீரேந்து பகுதி பாதுகாக்கப்படும் இயற்கை வள அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

நீரேந்து பகுதிகளைப் பாதுகாபபதற்கான திட்டம் ஒன்றின் அவசியம் பற்றி சுற்றாடல் இயற்கை வள அமைச்சு தெரிவித்துள்ளது.

மேட்டுப் பிரதேச நீரேந்து பகுதிகளில் முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் இதற்கான நிலையம் செயற்படும் இதற்கமைய மலைப் பிரதேசத்தில் மேட்டு நிலமாக உள்ள 300 மீற்றர் விஸ்தீரணமான பகுதி பாதுகாக்கப்படும்.

திட்டத்தின் பணிப்பாளர் வி.பி. முனவீர தகவல் தருகையில், உத்தேச நிலையம் அதன் சகல நடவடிக்கைகளையும் சுதந்திரமான முறையில் மேற்கொள்ளுமென்று தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பான கருத்தரங்கும் கண்காட்சியும் பத்தரமுல்லயிலுள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுதல் நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து இன்றும் நடைபெறவுள்ளது.

உதவி வழங்கும் அமைப்புகளின் பிரதிநிதிகள் பல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகள ஆகியோர் இன்றைய நிகழ்ச்சியில் பங்குபற்றுவார்கள். (அ-5)

## தனியார் பஸ்களிலும்

# ரிக்கற் இன்றிய பிரயாணத்துக்கு தண்டப்பணம் அறவிடப்படும்

(கொழும்பு)

சகல போக்குவரத்து சேவைகளிலும் இடம்பெறும் மோசடிகளைக் கட்டுபபடுத்தவென ரிக்கற் இன்றி பயணம் செய்வோர் மீது தண்டப் பணம் விதிக்கும் முறையை தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென்று பஸ சொந்தக்கார்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அகில இலங்கை தனியார் பஸ் சொந்தக்காரர் சங்கத்தன் செயலாளா அஞ்சனா பிரியன் ஜித கருத்து வெளியிடுகையில், பிரயாணி ஒருவர் பயணச் சீட்டை வைத்திருக்க வேண்டும் என வற்புறுத்துவதன் மூலம் பஸ் ஊழியர்கள் மேற்கொண்டு வரும் மோசடிகளை நிறுத்த முடியும எனவும் கூறினார்.

இதற்கு மேலதிகமாக பொதுப் போககுவரத்தின் தரத்தையும் இந்த வழிமுறை மேம்படுத்துகின்றது. நடததுனர்கள் சேகரிக்கும் பயணக் கட்டணத்தில் நாலில் ஒரு பங்கு தங்களை வந்து சேருவதில்லையென்றும் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (அ-5)

# கடினபந்து கிரிக்கெற் விளையாட்டு பாடசாலை மட்டத்திற்கு உயர்த்தப்படும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடினபந்து கிரிக்கெற் விளையாட்டை மேம்படுத்துவதற்கு மாகாணக் கல்வியமைச்சு துரித நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மாகாணத்தின் 24கல்வி வலயங்களில் இருந்தும் தலா ஒரு பாடசாலை வீதம் 24 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு கடினபந்து கிரிக்கெற சம்பந்தமாக விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எச். எம். முகைதீன் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் தற்போது மென்பந்துக கிரிக்கெற் விளையாட்டுப் போட்டிகளே அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

இதனால் இப்பகுதி மாணவர்கள தேசிய ரீதியில் பிரகாசிப்பதறகான வாய்ப்புக்களை இழந்து வருகின்றனர்.

கடினபந்து கிரிக்கெற்றில் அதிகளவில் ஆர்வம்கொண்ட திறமையான மாணவர்கள் இருந்தும் அவாகளுக்குப் போதியளவு உபகரணங்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படாமையினால் மாணவர்களின விளையாட்டு ஆற்றல் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலைமைகளை மாற்றிய மைபபதை நோக்காகக் கொண்டு பாடசாலை கடினபந்து கிரிக்கெற வீரர்களுக்கு சர்வதேசத் தரம் வாய்ந்த பயிற்சிகளையும் விளையாட்டு உபகரணங்களையும் வழங்குவதற்கு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (து-9)

# எரிபொருள் கொள்வனவுக் கூப்பன்

(துன்னாலை)

கடற்தொழில் நீரியல்வளத் துறை திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரூபா 5 ஆயிரம், ரூபா 7 ஆயிரம் பெறுமதியான எரிபொருள் பெறுவதற்கான கூப்பன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கலங்களையுடைய மீனவர்களில் எப்.ஜி.பி. படகு வைத்திருப்போருக்கு ரூபா 5 ஆயிரம் பெறுமதியான கூப்பனும் $3^1/_2$ தொன எடை வள்ளங்களுக்கு ரூபா 7 ஆயிரம் பெறுமதியான கூப்பனும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கபபடுகிறது.

ஒருவருக்கு வழங்கப்படும் கூப்பன்களில் 500 ரூபா, 1000 ரூபா, 2000ரூபா பெறுமதியான புள்ளிகள் உள்ளதாகவும் அவற்றை அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் முகவர்களிடம் கொடுத்துத் தமக்கு தேவையான மண்ணெண்ணெய், ஒயில் போன்ற எரிபொருட்களை பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் இதுவரை தமது பிரிவைச் சேர்ந்த 63 பேருக்கு இக் கூப்பன்கள் வழக்கபபட்டுள்ளதாகவும் மேற்படி திணைக்கள யாழ்ப்பாண உதவிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தம்மிடம் பதிவு செய்யப்பட்ட கட்டுமரம் வைத்திருக்கும் மீனவர்களுக்கு தலா ரூபா 10,000 பெறுமதியான துண்டுவலைகள் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கென 1000 துண்டுவலைகள் அனுப்பிவைககப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-101)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

6 எமது தமிழகப் பயணத்தில் காஞ்சி புரத்திற்குச் செல்வது என்ற முடிவை எம்மோடு இருந்த ஆறுபேரும் எடுத்தி ருந்தோம்.

தது இரண்டரை மணித்தியாலங்கள் ஆகும் அதிகாலை வேளையில் விழித்துக் கொனடோம். பஸ்ஸில் இடம்பிடித்துக் கொள்வதே பிரதான நோக்கமாக இருந் தது.




காஞ்சிபுரத்திற்குச் செல்லவேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருந் தன. அதில் ஒன்று காமாட்சி அம்பா ளைத் தரிசிப்பது, மற்றையது காஞ்சி காமகோடி பீடத்தின் தற்போதைய நிலை பற்றி அறிவது இதற்காக இரண்டு நாட் கள் காஞ்சிபுரத்திற்குச் சென்றிருந்தோம்.

## கோயில்களின் தலைநகரம்

பல்லவப் பேரரசின் தலைநகரமாக



விளங்கியது காஞ்சிபுரம். 3,368 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்த நகரத்தின் பிரதான தொழில் பட்டு நெச வாகும். இதனாலன்றோ "காஞ்சிப் பட்டு டுத்தி..." என்று கவிஞன் பாடியுள்ளான.

கோயில்களின் தலைநகரம் என்று பேசப்படும் காஞ்சியில் பதினாறு சிவனா லயங்களும் பதினாறு பெருமாள் கோவில்களும் உணடு.

கோயம்பேடு பஸ் நிலையத்திலிருந்து காஞ்சிபுரத்திற்குச் செல்லக் குறைந்

தமிழகத்து அரச பஸ்களில் இருக் கக்கூடிய பெரிய சிறப்பு பஸ் ஆசனங் களில் ஒருபக்கம் பெண்களுக்குரியது. மற்றையது ஆண்களுக்குரியது. ஆசனங் கள் வெறுமையாகக் கிடந்தால் மட்டுமே பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங் களில் ஆண்கள் அமரமுடியும்.

எனினும் பெண்கள் யாரேனும் பஸ் களல் ஏறினால் அவர்களுக்குரிய ஆசனங் களை விட்டுக்கொடுப்பது கட்டாயமான தாகும். பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் ஒரு பெண் இருக்கும் போது, அவருக்குப் பக்கத்தில் இருக்கின்ற இருக்கையில் ஆண் ஒருவர் அமர முடி யாது.

அதாவது ஒரு பெண்ணுக்குப் பக் கத்தில் ஒரு இருக்கை வெறுமையாக இருக்கும் அதேநேரம் ஆண் ஒருவர் நின்று கொண்டே பயணிப்பார்.

கணவனும் மனைவியுமாகப் பயணிப் பதாயின் அவர்கள் ஆண்களுக்கென ஒதுககப்பட்ட ஆசனத்திலேயே இருந்து கொள்வர். இதைப் பார்க்கும்போது பெருமையாக இருந்தது. அதேநேரம் நம்ம பஸ்களில் குழந்தையோடு ஏறு கின்ற தாய்க்கு ஆசனம் கொடுக்காத இளைஞர்களைக் கண்டிருக்கின்றோம். என்ன செய்வது எல்லாம் மனம் என்று விடாமல் சிலவற்றை சட்டங்களாக்கு வது தேவையானதென என்மனம் எண் ணிக்கொண்டது.

## காமாட்சி ஆலயத்தில்...

கோயம்பேடு பஸ் நிலையத்தில் ஏறிய நாம் காஞ்சிபுரத்தில் இறங்கியதும் ஆட்டோக்காரர்கள் சூழ்ந்து கொண் டார்கள். அங்குள்ள ஆலயங்களின் பெயர்களையெல்லாம் மந்திரம் சொல் வது போல சொல்லி முடித்தார்கள்.

இங்கெல்லாம் கூட்டிச் சென்று காட் டலாமென்றார்கள். அதில் நின்ற ஆட்டோ சாரதி ஒருவர், சற்று விவேகமாக சிலோ னில இருக்கின்ற சுப்பிர மணியம் லோயர் குடும்பத்தினர் போன கிழமைதான் இங்கு வந்தார்கள். நான் தான் அவர் களைக் கூட்டிச் சென்று எல்லா இடமும் காட்டினேன என்றார்.

எங்களின்கதையை வைத்து சிலோன் எனக் கண்டுபிடித்த ஆட்டோ சாரதியு

## யானைகள் நடத்திய வீதிமறிப்பு

டன் காமாட்சி கோவிலுக்குச் சென் றோம். பிரமாண்டமான இராஜ கோபுரம், காஞ்சிகாமகோடி பீடத்தின் நிர்வாகத் தில் இயங்கும் ஆலயம் என்பதைப் பிரதி பலிப்பதாக ஆதிசங்கரர், பெரியவர், ஜெயேந்திரர், வஜேந்திரர் ஆகியோரின் படங்கள் பொறிக்கப்பட்ட விளம்பரப் லகை அங்கு வைக்கப்பட்டிருந்தது.

வரிசையில் நின்று ஆலயத்திற்குள் செனறோம். கருங்கற்களால் கட்டப்பட்ட அந்த ஆலயத்தை ஒருமுறை சென்று பார்ப்பதுடன் மட்டும் ஆலய அமைப் பைக் கண்டுபிடித்து விட முடியாது.

அந்தளவிற்கு ஆலயத்தின் அமைப்பு இருந்தது. கருங்கற்கள் முழுவதிலும்,




ஆலய வரலாறு செதுக்கப்பட்டுள்ளது.

## யானை ஆசீர்வாதம்

ஆலய உள் வீதியில் இரண்டு யானை கள பக்தர்களை ஆசீர்வதித்துக் கொண் டிருந்தன. ஆசீர்வாதம் இலவசமாகக் கிடையாது. துதிக்கையில் காசு வைத் தால் மட்டுமே யானை ஆசீர் வதிக்கும்.

கணவனும் மனைவியும் ஒன்றாகச் செனறாலும் காசு கொடுத்தவரை மட் டும் ஆசர்வதிக்கும் நுட்பத்தை யானைக் கும் பழக்கியிருக்கிறார்கள். கூடவே குழந் தைகள் அல்லது சிறியவர்கள் சென் றால் ஒருவர் கொடுக்கும் காசுடன் எல் லோருக்கும் ஆசி கிடைக் கும்.

காசு என்றால் மனிதர்கள் அல்ல, யானைகளும் விழிப்பாகச் செயற்படும் என்பதைக் காமாட்சி கோயிலில் கண்டு கொண்டோம்.

கோயிலில் நின்ற இரண்டு யானை களும காஞ்சி சங்கர மடத்திற்குச் சொந தமானவை. நாங்கள் அங்கு சென்ற காலத்தில் காஞ்சிபுரத்தில் இடைத் தேர் தல் நடைபெறுவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டி ருந்தன.

தேர்தல் பிரசாரங்கள் அசுர வேகத் தில் நடைபெற்றது. ஒருநாள் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பிரசாரம் செய்வதற்காக காஞ்சிபுரத்திற்கு வந்தி ருந்தார். வீதி முழுவதும் பொலிஸாரின் பாதுகாப்பு, வீதியால் செல்வதற்கும் தடை.

அந்த நேரத்தில் சங்கரமடத்து யானை களை பாகன் வீதிக்குக் கொண்டு வந் தார். ஆத்திரமுற்ற பொலிஸார் ஒருவர் ஓடிச்சென்று பாகனின் கன்னத்தில் "பளார்" விட்டார்.

**என். விஜயன்**

கோபமுற்ற பாகன் நமக்குப் புரியாத மொழியில் ஏதோ சொல்ல, அவ்வளவு தான் யானைகள் வீதிக்குக் குறுக்காக நின்று மறியல் செய்தன.

முதல்வர் வருவதற்கு இன்னமும் சில நேரங்கள் இருக்கையில் காஞ்சி ஜெயேந திரரின் யானைகள் வீதியை மறித்து நிற்பது பொலிஸாருக்குப் பெரும் தலை யிடியைக் கொடுத்தது.

அங்கே நின்ற பொலிஸ் பொறுப்பதி காரி யானைப் பாகனிடம் சென்று நடிகர் வ டிவேலு படத்தில் சொல்வது போல "ஐயா! வேண்டாமைய்யா! வீண்வம்பு, அவனுககாக நான் மன்னிப்புக் கேட்டுக் கிறேன். உன்ர யானைக்குச் சொல்லப் பா... "என்றார்.

அதிகாரியின் மன்னிப்புடன் சாந்தம டைந்த பாகன் மீண்டும் ஏதோ கூற யானைகள் வீதிமறிப்பைக் கைவிட்டன.

(வளரும்)

# இறைச்சிக்கடைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்

இலங்கையில் 19ஆம் நூற்றாண்டின் நடைமுறையிலிருந்து வரும் இறைச்சிக் கடைக்கான சட்டத்தை திருத்தியமைப் பதற்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்தச் சட்டங்கள் மிருகங்களை உண வுக்காக வெட்டுவது தொடர்பாக தற் போதைய தேவைகளுக்கு ஏற்புடையதாக இல்லையென கொழும்பு மாநகர சபையின் பிரதம கால்நடை வைத்தியர் எஸ்.பி.இளயப் பெருமாள் தெரிவித்தார்.

கோழிகளை இறைச்சிக்காக வெட்டு வது குறித்து இந்தச் சட்டங்களில் பிர மாணஙகள் எதுவும் இல்லாததால் கோழிகள் கண்ட இடங்களில் வெட்டபபடுகின்றது என அவர் குறிப்பிட்டார்.

தற்போது இலங்கையில் வருடாந்தம் 3 கோடி கோழிகள் உணவுக்கு எடுக்கப்படுகின றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.(அ-9)

# தமிழ்விழா

உடுவில் மகளிர் கல்லூரியின் தமிழ் விழா நாளை புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா, நல்லூர் மங்கயர்க்கரசி வித்தி யாலய அதிபர் திருமதி கமலா குணராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(ற-2)

# நூல்களின் கண்காட்சியும் விற்பனையும்

சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்து ராமகிருஷ்ண- விவேகானந்த நூல்களின் கண்காட்சியும் விற்பனையும் நாளை புதன் கிழமை காலை 10.00மணிக்கு யாழ. வேமபடி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடை பெறும். புத்தகக் கண்காட்சி ஆரம்ப மாவ தற்குமுன் யாழ். பிராந்தியத்திலி ருந்து வெளிவரும் தினப்பத்திரிகைகளின் ஆசிரி யர் களுக்கு ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாக் சிரம சுவாமி சித்ரூபானந்தா நூல்களை அன்பளிப்புச் செய்வார்.

மேற்படி கல்லூரி அதிபர் திருமதி கமலா பொன்னம்பலத்துக்கு கோவை ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய வெளி யீடான திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு அன் பளிப்புச் செய்யப்படும். (து-19)

# பிரதேச செயலர் நியமனம்

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலராக எஸ்.வரதீஸ்வரன் கடந்த 25 ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார்.

முன்னர் பருத்தித்துறை பிரதேச செயலராக இருந்த ஆ.சிவசுவாமி யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். அன்று தொடக்கம் பிரதேச செயலர் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது.

பருத்தித்துறை உ்தவி பிரதேச செயலராக எஸ்.வசந்தகுமார் நியமனம் பெற்ற தையடுத்து இவர் பிரதேச செயலரின் செயற்பாடுகளையும் செய்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-35)

### அஞ்சமாட்டோம்

கடலன்னையே! - நீ
சீற்றம் கொண்டு - எம்மவரை
அழித்துச் சென்றாலும்
உன்னுள் நுழைந்து
முத்துச் சேகரிப்பதில்
அஞ்சமாட்டோம் - நாம்
கங்கை கொண்ட சோழனின்
பரம்பரையல்லவா!

N.நிகா,
உடுவில்.

### தோழர்கள் கூடி....

எப்போ விடுமுறை கிடைக்கும் என்று
விரல் விட்டு விரல் எண்ணி
அந்த நாளும் வந்து விட்டது
ஆனந்தம் நமக்கு - இனி
ஆற்றங் கரையில் புழுதி மணலில்
ஆடி விளையாடி....
இன்பமாகப் பொழுதைக் களிப்போம்
தோழர்கள் நாம் கூடி.

ம.கீதா,
யாழ்ப்பாணம்.

### துணிச்சல்

ஆழிப் பேரலைப் பயமோ
இன்னமும் தீரவேயில்லை
அந்தச் சுனாமிக்குப் பின்னரா
இந்த நீச்சல் - தம்பிகாள்!
அதுசரி...
இளங்கன்று பயமறியாது
உண்மைதான்.


ஜெகநாதன்,
செம்மணி வீதி.

### விளையாட்டு

பள்ளி செல்லும் பாலகரே!
கோடை விடுமுறையிலே
குதூகலமாக தோழருடன்
கடல் அன்னையின் மடியில்
விளையாடுகிறீர்களே! - அவள்
மீண்டும் பொங்கியெழமாட்டாள்
என்பதில் என்ன நிச்சயம்...?

கஜசங்கவி,
இணுவில்.

## மௌனத்தின்



### எதிர்நீச்சல்

உலகம் நவீன
யுகம் நோக்கிப்
பாய்ச்சல் - எம்
வாழ்வினிலே
தடைகள்
முழு வீச்சில்
தடைகளை அகற்ற
வேண்டும்
மனத் துணிச்சல்
அதனால் - ஆற்றிலே
கற்கின்றோம்
எதிர்நீச்சல்!

சொ.நித்தியா.
கொக்குவில்.

## தேடல்கள் - 60

### செல்லப் பிள்ளைகள்

சுனாமி சீறி
வந்தாலென்ன
சுற்றத்தைக் கவர்ந்து
சென்றாலென்ன - எம்
கடல் தாயிற்கு - நாம்
என்றும்
செல்லப்பிள்ளைகளே!

கி. குகநாதன்,
பருத்தித்துறை.

### துணிவு

நீவிர்
தமிழனெனச் சாட
இதுவொன்றே போதும்!
சுனாமி வந்தாலென்ன.....
சூறாவழி வந்தாலென்ன....
அசையாத உம் துணிவு
என்றென்றும் வாழ்க!

ஜெ.சுபா,
நல்லூர்.

## மௌனத்தின் தேடல்கள் - 62



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை **மிகச் சிறிய** கவிதைகளாக்கித் **தபால் அட்டையில்** வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள். **கிடைக்கவேண்டிய இறுதித் திகதி** - 06.06.2005 அனுபபவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 62

**வலம்புரி - சங்குநாதம்**
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.




### தமிழ்ப்பெண்ணே!

நீர்க்குருதி வற்றியதால்
நிறம் வெளுத்த மேகங்களே
போர்க்களத்துப் ப,க்கஎென
புதைந்து போன நினைவுகளே
ஆர்ப்பரித்து அன்புடனே
அறிவ,ட்டும் பண்புகளே - உம்
தேர்ப் பெயரை நானினறு
செதுக்குகின்றேன் கவி வரியாய்...

கங்கைக்கு கரையாகும்
மங்கையே யுகக்குயிலே - தமிழ்
தங்கைக்கு தாயாகும்
தாயே தமிழ்மாதே - மறம்
பொங்கி எழுகின்ற
புயலே அலைமழையே - சுகம்
தங்கும் சுனாமியை
சுருக்கிடும் தமிழ்ப்பெண்ணே!

மு.சுகந்தினி.
அச்சுவேலி.

### உன்னால்...!

என் இதயத்தை பாலைவனம்
என்று சொன்னாய்
உண்மைதான் பெண்ணே!
உன் காதல் என்னும்
உறமிட்டு நித்தமும்
கனவுகள் என்னும் நீர்பாய்ச்சி
வாழ்க்கை என்னும் மலர்கள்
ப,த்துக் குலுங்கிய என் இதயவனம்
நீ என்னை நீங்கிய பின் - என்
கண்ணீர் மழையால் அழிந்து
மூச்சுக் காற்றின்
வெப்பத்தால் வரட்சியுற்று
பாலைவனம் ஆனது
உண்மைதான் பெண்ணே!
உண்மைதான்!

சிந்து,
பருத்தித்துறை.

### சுக(மௌன)மான இராகங்கள்

அந்தி மனதிலல்ல அடிமனதில்
சொந்தமாகிப் போன சுவையானவனே!
ஏந்தன் மனதில் இருந்தாலும் நீ
எங்கோ வெகு தொலைவில்...
அதை நினைக்கும்போது
நொந்து நெஞ்சம் நொடியிற் கனவாகி
வெந்து தவிக்க - நீ
வேடிக்கையாய்ச் சிரிக்கின்றாய்
விதியை எண்ணி - நான்
தவிக்கின்றேன்

கூவும் குயிலான வுன்
குரலோசை கேட்டு
தாவியலைந்து நான்
தடம் புரளுகின்றேன்
ஏந்தனது நெஞ்சை - ந்
எட்டியுதைக்கின்றாய்
பந்தமும் பாசமும் - சொந்தமல்ல
என்று சொல்லி
சோலையில் பசுங்கிளியாய்த்
தோன்றி மறைகின்றாய்

உனக்கிது மனவிளையாட்டு
ஏனக்கோ மரணவிளையட்டு
தரோகத்திற்குத் தலைமையேற்க - நீ
துடியாய்த் துடிக்கின்றாய்
என் மனமோ
தூக்கமின்றி மரணத்தைத்
தூக்க நினைக்கிறது
மரணம் எனக்குத்தான் எனும்
போது - நீ
மேலும் சிரிப்பாய் - உள்ளூரக்
குதூகலிப்பாய்
என் ஆத்மா மட்டுமே - என்
மரணத்தின் காரணம் சொல்லும்
சுக(மௌன)மான இராகங்கள்!

நோயல்.

### தடை

எம்முடைய காதலுக்கு
உன்னுடைய பெற்றோர்
தடை!

### மழலை

மனங்கள் விரும்புகின்ற
இனிமையான இசை

-S.K. அயூறதி, சங்கானை.

### நீர் மேல் எழுத்து

இனித்திடக் காதல் சொல்லித் தந்தாய் - ஒரு
கணத்தினில் நெஞ்சை அள்ளிச் சென்றாய்
உன்னைத் தேடி நான் துடிக்க - உன்
உறவில்லை என்று என் மனம் தவிக்க
என்னைப் விட்டுப் போனது மேன் -என்
ஏங்கும் நெஞ்சை வெறுப்பதுமென்?
ஏனோ காதல் இப்பாரினிலே - இனி
இன்பம் உண்டோ என் வாழ்வினிலே
எனக்கென வாழ்வேன் என்று வந்தாய் - நீரில்
எழுத்தில்லை காதல் என்று சொன்னாய்
ஆசைகளை வளர்த்தது - ஏன்
அடியுடன் அன்பை அறுத்தது மேன்?
வேறு திசையைப் பார்ப்பதும் - ஏன்
வேதனை தன்னைத் தருவது மேன்?

யோ.விம்சியா,
உடுவில்.

### என் காதல்

முகவரி தவறிப்போன
கடிதம் போல - என்
காதல் திசை மாறியதாய்
உணர்கின்றேன் - என்
காதலுக்கு அர்த்தங்கள்
தேடினேன் - அது
கண்ணுக்குத் தெரியாத
காற்றைப் போல...

K.சாளி, மல்லாகம்.

### பணமுள்ள ஏழைக்கு...!

சைக்கிளில் போவதை உன் மனம் விரும்புமா?
குடிசை வாழ்ககையை உன் உடல் தாங்குமா..?
அக்கா, தங்கைகளின் உடைகளை
உன்னால் போட முடியுமா...?
அரை வயிறு உணவுடன் உன் பசி தீருமா..?
பனி முட்கள் மீது - சிலவேளை
மழைத்துளி போர்வையுடன் தூங்க முடியுமா?
நம் காதலுக்குப் பணம் மட்டும்தான்
தடையென்றால்... என்னால்
உழைக்க முடியும்!
சாதியும் தடை போடுவதால்
என்னால் புதுப்பிறவி எடுக்கமுடியாது
காதலுகக கண்ணில்லாததால் நம்மீது
மோதிவிட்டது - எமக்கு
கண்ணிருப்பதால்... விலகிப்
போய்விடுவோம்!

க.அப்பாஸ், வரணியூர்.

# புகைத்தல் பழக்கம் மனித சமுதாயத்தின் கேடு



மே 31, உலக புகைப்பொருள எதிர்ப்புத்தினமாகும். இத்தினத்தை முன்னிட்டு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் சில அறிவுறுத்தலகளை மக்கள் முன்வைக்கக் கடமைப்பட்டுள்ளது. இன்று உலக நாடுகளில் மக்கள் சமுதாயம் என்றுமில்லாதவாறு புகைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிக் கொண்டு வருகின்றது. ஏழை, பணக்காரன், சிறுவர், முதியவர், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லாமல எவரையும் இந்தப் புகைபழக்கம் விட்டுவைப்பதில்லை. உலகளாவிய ரீதியில் புகைத்தல பழக்கம் மனித வர்க்கத்திற்கு கேடு விளைவிக்கும் காரணியாக இருக்கின்றது. இப்பழக்கத்தினால் உலகில் ஆண்டுதோறும் 120 கோடிக்கு மேற்பட்ட மக்கள் புகைக்கு அடிமையாகின்றார்கள். இதனால் ஒரு வருடத்தில் 10 இலட்சத்திற்கு மேற்பட்டோர் மரணத்தைத் தழுவிக் கொள்கின்றார்கள்.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் வருடம் தோறும் 22 ஆயிரத்திற்குமேல் மரணத்தை தழுவிக் கொள்கின்றார்கள். மேலும் இலங்கையில் 12 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் 55 சதவீதத்தினர் புகைப்பழக்கம் உடையவர்கள். புகைத்தல் காரணமாக 50 சதவீதமானவர்கள் இருதய நோயினாலும் 40 சதவீதமானவர்கள் புற்றுநோயினாலும் மரணிக்கின்றார்கள். இத்துடன் புகைப்பழக்கம் உடைய ஒருவருக்கு பிறக்கும் குழந்தைக்கு 40 சதவீதம் புற்றுநோய் வர வாய்ப்புண்டு.

ஒருநாளைக்கு 10 சிகரட்டைப புகைப்பவன் ஒரு நாளைக்கு 11 நிமிட ஆயுளைக் குறைக்கின்றான். இதனால் மற்றவர்களைவிட 5 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்களுக்கு முன்பதாகவே மரணத்தை தழுவுகின்றான். 60 வயதில் புகைத்தலைக் கைவிடுபவர்கள் 3 வருடங்கள மேலதிகமாக வாழக்கூடிய வாய்ப்பையும், 50 வயதில் புகைததலைக் கைவிடுபவர்கள் 6 வருடங்களுக்கு மேலதிகமாகவும்,40 வயதில் புகைத்தலை கைவிடுபவர்கள் 9 வருடங்களை மேலதிகமாகவும், 30 வயதில் புகைத்தலைக் கைவிட்டால் 10 ஆண்டுகள் மேலதிகமாகவும் வாழ்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

மேலும் ஒருவன் புகைக்கும் பொழுது 25 சதவீதப் புகையை உள் இழுக்கின்றான். 75 சதவீதத்தை வெளியே விடுகிறான். இதனால் புகைப்பவனுக்குப் பக்கத்தில் நிற்பவரை வெளியேறும் புகையில் உள்ள நிககோட்டின் என்னும் நச்சு தாக்குகின்றது. இதனால் சுகதேகியும் பாதிப்படைகின்றான். புகைபபிடிப்பவரில் வாய் மணத்தல், நாட்பட்ட இருமல், நெஞ்சுவலி, கைவிரல்கள் பழுப்பு நிறமடைதல் என்பன ஏற்படுகின்றன. இதனால் மற்றையோர் இவர்களுடன் நெருங்கிப்பழக விரும்பமாட்டார்கள்.

இன்று புகைப்பவர்களில் 20 சதவீதமானவர்கள் 15 - 20 வயதிற்கும் இடைப்பட்ட பாடாசலை மாணவர்கள் ஆவர். இன்று இலங்கையில் முன்னைய ஆண்டுகளைவிட 75 சதவீத பாவனை கூடியுள்ளதாகப்புள்ளிவிபரம் கூறுகின்றது. புகைபபதால் கொலை, கொள்ளை, பாலியல் போன்ற தீய செயல்களைச செய்ய இது உடலுக்கு உற்சாகமளித்துத் தூண்டுகின்றது.

புகைப்பதால் ஏற்படும் நோய் பற்றி ஆராய்ந்தால்,

1.இது உடம்பின் சகல பகுதிகளையும் பாதிக்கின்றது.

2.அடிக்கடி வெறும் தேனீருடன் புகைப்பவர்களுக்குக் கால்பாதங்களுக்குச் செல்கின்ற இரத்தச்சுறறோட்டம் தடைப்படுகின்றது.

3.குருதிக் குழாய்களில் உள்ச்சுவர்களைப் பழுதடையச் செய்து கல்சியப் படிவுகளை ஏற்படுத்தி அடைப்பினை உண்டாக்குகின்றது. இதனால் மாரடைப்பு, பாரிசவாதம், இரத்த அழுத்தம் என்பன ஏற்படும். புகைக்காதவரை விடப் புகைப்பவாகளுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு70 சதவீதம் அதிகம்.

4.கண்பார்வையை இழக்கச் செய்கின்றது.

5.பாலியல் உணர்வை மழுங்கடிக்கின்றது.

6.நோய் எதிர்ப்பு வலுவினை குறைததுவிடுகின்றது.

7.உடம்பின் சகல நரம்பு மண்டலங்களையும் பாதிக்கின்றது.

8.சுவாச உறுப்புக்களைப் பாதிப்படையச் செய்து தொடர்ச்சியான இருமல், அஸ்மா முதலிய வியாதிகளை ஏற்படுத்துகிறது.

புகைத்தலைவிடுவதற்கான சில அறிவுறுத்தல்கள்,

◆புகைப்பது இல்லை என உறுதியான முடிவினை எடுத்தல்.

◆புகைப்பிடிப்பவரைவிட்டு விலகி இருத்தல்.

◆தினமும் இரு தடவைகளில் சுடுநீரில் குளித்துவிடடு குளிர்பானங்கள் அருந்துதல்.

◆தினமும் திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்தல், போஷாக்கான உணவுகளை உண்ணுதல், குறிப்பாகப் பழவகைகளை உண்ணுதல் ஆகும். நோயற்ற வாழ்வே உலகின் சிறந்த சுகம் ஆகும்.

நாம் சுகத்தை அனுபவிக்க வேண்டுமாயின் புகைத்தலை விட்டொழிக்க வேண்டும்.

அவ்விதம் விட்டொழித்தால் செல்வம், சிறப்பு, சுகம் உண்டாகும் என்று உறுதிப்பட எடுத்துரைகின்றார்கள் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர். □

**செ.குமாரசிங்கம் J.P.**
செயலாளர்
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்

---

## பகுதி நேர ஆங். ஆசிரியர்களிடமிருந்து நேர்முகத் தரவு திரட்டல்

(பொன்னாலை)

வடக்குக் கிழக்கிலுள்ள அனைததுக் கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் பகுதி நேர அங்கில ஆசிரியர்களிடமிருந்து அவசர நேர்முகத் தரவு திரட்டல் இடம்பெற ஏற்பாடகியுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிாியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி கிளிநொச்சி கல்வி வலயத்தில் கடந்த 20 ஆம் திகதி நேர்முகத் தகவல் திரட்டும் பணி நடைபெற்றதாகவும தரவுகளை விரைவாகத் திரட்டி அனுப்புமாறு கல்வியமைச்சின் சிரேஷ்ட செயலாளர் கே.ஏ.எல்.எல் விஜயரட்ண, மாகாணக் கல்வியமைச்சிடம் கேட்டுள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை சிறீராம்ஸ் தொழிற்சாலை வீதி, கோப்பாய் தெற்கிலுள்ள தமது தொடர்பகத்தில் அறிய முடியுமென்று மேற்படி சங்கத்தின் தலைவர் தெரிவிக்கிறார்.

(து-49)

## பல்கலைக்கழகத்தில் பதவி வெற்றிடங்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மருத்துவ படம், விவசாயபீடம, கலைபபீடம், சட்டத்திணைக்களம ஆகியவற்றிற்கு பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் போன்ற பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாக அறிவிககப்பட்டுளளது. இவற்றை விட உடற கல்வி பிரிவிலும் சகல துறைகளிலும் விரிவுரையாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பேராசிரியர், விரிவுரையாளர்கள் ஆகிய பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக விணணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏனைய பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யூலை மாதம 29ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்ப படிவங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில பெற்றுக்கொள்ளமுடியும். இந்த வெற்றிடங்கள சம்பந்தமான முழு விபரங்களையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பெற்றுககொள்ளுமாறு பல்கலைக்கழக பதிவாளர் கேட்டுக் கொண்டுள்ளாா.

(அ-5)

## புதிய நிர்வாகம் தெரிவு

(பொன்னாலை)

அண்மையில் இடம் பெற்ற அரியாலை வடக்கு மாதர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக திருமதி மேரிவிக்ரோரியா மகேஸ்வரி திலகேந்திரராஜா, உபதலைவராக திருமதி சுதா எட்மன், செயலாளராக திருமதி பிரியவாணி ஜீவதாஸ் மற்றும் உபசெயலாளராக திருமதி சுபாஷினி சதீஸ்குமார், பொருளாளராக திருமதி புஸ்பலதா கலாதரன் ஆகியோரும் எட்டுப்பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

(ந-49)

## யாழ்.மாநகரப் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்பபு நாய்களுககு விலங்கு விசர் நோய்த்தடுப்பு ஊசி 2ஆவது கட்டமாக கீழ்வரும் நிலையங்களில வைத்து வழங்கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுததி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

**கொழும்புத்துறைப் பகுதி**

31.05.2005 - 6.00 - 10.00 மணி வரை கலைச்சுடர் ச.ச.நிலையம், 31.05.2005 10.30-12.00 மணிவரை கொழும்புத்துறை வீதி - சந்தன மாதா கோவிலடி, 31.05.2005 2.00-4.00 மணிவரை செஞ்சிலுவைச சங்கம் - யாழ்.கிளை, 01.06.2005-8.00 - 10.00 மணி வரை நாவலர் கலாச்சார மண்டபம்

**வண்ணார் பண்ணைப் பகுதி**

**நாவாந்துறைப் பகுதி**

01.06.2005 - 10.30 - 12.00 மணி வரை வள்ளுவர் ச.ச.நிலையம், 01.06. 2005 - 2.00 - 4.00 மணி வரை காமாட்சி ச.ச.நிலையம், 02.06.2005 - 8.00 - 10.00 மணிவரை நீராவியடி சைவபரிபாலனசபை மண்டபம், 02.06.2005 - 10.30 - 12.30 மணி வரை பிறவுண் வீதி 1ஆம் ஒழுங்கை ஞானக்குழந்தை பாலர் பாடசாலை அருகில, 02.06.2005 - 2.00 - 4.00 மணிவரை கில்னர்லேன் பாலர் பாடசாலை, 07.06.2005 - 8.00 - 10.00 மணிவரை ஆத்திசூடி ச.ச.நிலையம், 07.06.2005 - 10.30 - 12.30 மணி வரை ஆறுகாலமடம் அறிவொளி ச.ச.நிலையம, 07.06.2005 - 2.00 - 4.00 மணி வரை அண்ணா ச.ச.நிலையம், 08.06.2005 - 8.00 - 10.00 மணி வரை சீனிவாசகம் வீதி - கொட்டடி ச.ச. நிலையம், 08.06.2005 - 10.30 - 12.30 மணி வரை சென் நிக்லஸ் ச.ச.நிலையம், 08.06.2005 - 2.00 - 4.00 மணி வரை ஒஸ்மானியாக் கல்லூரி, 09.06.2005 8.00 - 10.00 மணிவரை - நல்லூர் தெற்கு ச.ச.நிலையம

**பசார் பகுதி**

09.06.2005 - 10.30 - 12.30 மணி வரை கன்னாதிட்டி வீதி - காளி கோவிலடி முன், 09.06.2005 -2.00 - 4.00 மணிவரை - லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரி ஸ்ரான்லி வீதி, 12.06.2005 - 8.00 - 10.00 மணிவரை இராசாவின் தோட்ட அருள்மாதா ச.ச.நிலையம், 12.06.2005 - 10.30 - 12.30 மணி வரை கொட்டடி முத்தமிழ் ச.ச.நிலையம், 12.06.2005 - 2.00 - 4.00 மணி வரை யாழ்.புனித மாரியாள் வித்தியாலயம முன்பாக.

(அ)

## வடமராட்சி மீனவர்களுக்கு படகுகள்

(துன்னாலை)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பகுதி மீனவர் 35பேருக்கு படகுகள வழங்க கடற்றொழிற் நீரியல் வளத்துறை திணைக்களம் தீர்மானித்துள்ளது. சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான 35 படகுகளும் சுனாமியால் பெரும் பாதிப்புக்குள்ளான பகுதிகளான வடமராட்சியில் தொண்டமனாறு முதல் பருத்தித்துறை பகுதியைச சேர்ந்த 10பேருக்கும், பருத்தித்துறையிலிருந்து நாகர் கோவில் வரையான பகுதியைச் சேர்ந்த 10பேருக்கும், மாமுனையிலிருந்து சுண்டிக்குளம் வரையான பகுதியிலுள்ள 15 பேருக்குமாக மொத்தம் 35 படகுகள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ- 101)

## கடன்தொகை இரட்டிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு வீடு மற்றும் காணிகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்படுகின்ற கடன தொகையை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புதிய தீர்மானத்திற்கேற்ப சுமார் 20 இலட்சம் ரூபா வரை அரசாங்க ஊழியர்களுக்கு கடனுதவி வழங்கப்படவிருப்பதாக அரச நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

(ந-9)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று மு.ப. 10.மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும், சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராசாவும் கலந்து கொள்கின்றனர்.

திருமதி கமலா குணராசா பரிசில்களை வழங்கவுள்ளாா. (து)

## இசை நாடகம்

(கற்கோவளம்)

பருத்தித்துறை, தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன ஆலயத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை கற்கோவளம் வேணுகான சபா மன்றம் வழங்கும் "காத்தவராயன்" எனும் இசை நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

(து-104)

## வில்லிசையில் பாபாவின் மகிமை

(கற்கோவலம்)

பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் அவதார மகிமையை எடுத்தியம்பும் வில்லிசை நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை பி.ப 4.00மணிக்கு பருத்தித்துறை சிவன் கோவில் பர்வதவர்த்தினி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் ஆசீர்வாதத்துடன் புட்டபர்த்தியிலிருந்து வருகைதரவுள்ள வில்லிசைக் குழுவினர் இந்நிகழ்ச்சியை நடத்தவுளளனா என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-104)

## குளத்தில் மூழ்கி மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை பெரியகுளம் பகுதியில் குளத்தில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

வங்கி ஊழியரான சஞ்ஜீவன மற்றும் சட்டத்தரணி ரஜனிகாந்த் ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவார்கள். இவர்களது சடலங்கள் திருகோணமலை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

(து-8)

## மந்த கதியில் காணி வழங்கும் திட்டம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு காணிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் மிகவும மந்த கதியிலேயே இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணிகளை அளந்து உரியவர்களிடம் கையளிக்கின்ற பணி இது வரை ஆரம்பிக்கப்படவில்லை என்றும் இதனால் சுனாமியால் பாதிககப்பட்ட மக்களுக்கான நிரந்தர வட்டுத் திட்டப் பணி மேலும் தாமதமடையுமென அஞ்சுவதாகவும் இப்பகுதி பொது அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன.

(து-43)

## விசாரணைக்கு விசேட குழு

(கொழும்பு)

மட்டக்களப்பில் சப்இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணை செய்ய விசேட குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுளளது.

(ந-8)

# கனடாவில் தமிழ்மொழி வாரம்

**(26.06.2005 - 27.06.2005)**

**எமது சமூகத்தின் உயிர்ப்பான இருப்பு எமது மொழியையும் எமது கலை, இலக்கியங்கள், பண்பாட்டையும் பேணி வளர்ப்பதிலேயே தங்கியுள்ளது. புலம்பெயர்ந்தாலும் மொழிப புலமையை வளர்த்துக் கொள்கிற சமூகங்கள் வரலாற்றை வெற்றி கொள்கின்றன. தமிழ்மொழி கற்றலின் அவசியத்தையும் தமிழ்மொழியின் சிறப்பையும் வலியுறுத்தவும் தமிழுக்கு வளத்தையும புதுமையையும் சேர்க்கவும் தமிழ்மொழி வளர்ச்சியை முன்னெடுப்பதற்காகத் தமிழ் மொழி வாரம் கொண்டாடப்படுகிறது. "தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு''**

உலகில் வாழும் பல்வேறு இனங்களும் தத்தம் தாயக மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வாழ்கின்றன என்பது வரலாறாகும். இவ்வாறு புலம்பெயர்ந்த இனங்களிற் சில தாம் குடியேறிய நாடுகளை ஆக்கிரமித்து, அடிமைப்படுத்தித தமது அரசுகளை நிறுவி ஆட்சிசெய்தன.

ஆட்சி அதிகாரத்தின் மூலம் தத்தம் மொழி, கலை, பண்பாட்டை அந்நாட்டு மக்களிடையே புகுத்தி, அவற்றை உயர்ந்த தாக்கித் தமது இனத்திற்குப் பெருமை சேர்த்தனர். தம்மினமே உயர்ந்த இனம் என்னும் தோற்றத்தையும் உருவாக்கிக் கொண்டனர்.

இந்த வகையில் குறிப்பிடத்தக்கோர் ஐரோப்பியர் ஆவர். இவர்களில் ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், இசுப்பானியர், போர்த்துக்கேயா, ஒல்லாந்தர் ஆகியோரைச் சிறப்பாகக் கூறலாம். மிகச்சிறிய தொகையிற சென்ற இவ்வினத்தினர் மிகப்பெரும்பான்மையாக வாழந்த அவ்வவ் நாட்டு மக்களைத் தத்தம் மொழிவழி ஆட்சிசெய்தனர்.

தாம் அடிமை கொண்ட நாடுகளின் செல்வங்களைச் சுரண்டித் தம்மையும் தமது நாட்டையும் வளமாக்கிக்கொண்டனா. தமது வாழ்க்கை முறை, ஆட்சிமுறை, நீதிமுறை ஆகியவற்றை அந்நாடுகளிற் புகுத்திப் பெரும் பணபாட்டுப் படையெடுப்பையே நிகழ்த்திவிட்டனர். இதன் விளைவாக இவர்களது ஆட்சியிலிருநது விடுபட்ட பின்னரும் அடிமைப்பட்ட நாடுகளால் இன்றுவரை நிமிாந்து நிற்க முடியவில்லை.

புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் வேறு சில இனங்கள் தத்தம் மொழி, கலை, பண்பாட்டைப் பாதுகாத்துத் தமது அடையாளஙகளை இழக்காது தமது தனித்துவத்தைப் பேணிக்காக்கும் அதேவேளையில, சமூகப் பொருளாதாரத்துறைகளிலும் மேம்பட்டும் வாழ்கின்றன. இவை தமது பண்பாட்டுச் சிறப்பின் மூலமும், தத்தம் தாய் நாட்டுச் சிறப்பியல்புகள் மூலமும் பிற இனங்களால் மதிக்கத்தக்க இனங்களாக வாழ்ந்து வருகின்றன. இவ்வாறான இனங்களிற குறிப்பாகச் சீனர், ஜப்பானியர், யூதர், இத்தாலியர், கிரேக்கர் ஆகியோரைக் கூறலாம. இவற்றுள் சீனா, ஜப்பான் ஆகிய இருநாடுகளும் ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்குச் சிறிதளவேனும் இடம் அளிக்காது வாழ்ந்த பெருமைக்குரியன.

யூத இனம் தமக்கென ஒருநாட்டை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டிருக்கவில்லை. எனினும் அவ்வினம் கடந்த 2,500 ஆண்டுகளாகத் தமது தனித்துவத்தைப் பேணியதன் மூலம் பெருமைக்குரிய இனமாகத் திகழ்ந்து வருகிறது.

மேற்கூறிய இரு தொகுதி இனங்களும் உலகில் பிற இனங்களால் மதிக்கத்தக்க இனங்களாகத் தத்தம் அடையாளங்களை இழக்காது கட்டொருமைப்பாட்டோடு வாழ்ந்து வருகின்றன. மேலும், உலகின் கலை, பண்பாடு, அறிவியல், தொழில்நுட்பம் இன்ன பிற துறைகளின் மேம்பாட்டிற்கு உதவிப் பிற இனங்களால் போற்றுதற்குரியனவாகவும் விளங்குகின்றன.

அடுத்துப் புலம்பெயாந்த இனக் குழுககளில் ஒன்றான ஆபிாிக்க மக்களை எடுத்து நோக்கில் பல்வேறு ஆபிரிக்க நாடுகளும் ஐரோப்பியாகளால் அடிமை கொள்ளபபட்ட காலத்தே, ஆபிாிக்க மக்கள் பல்வேறு நாடுகளுக்கு அடிமைகளாக அல்லது கூலிகளாகப் புலம்பெயர்த்தப்பட்டனர்.

சில ஆபிாிக்க இனங்கள் சொந்த நாட்டிலேயே தமது மொழியை இழந்தன. சில இனங்களின் மொழி வளாச்சி குன்றியது. தமது அடையாளத்தைத் தொலைக்கும் அளவுக்குத் தம்மை ஆண்ட இனங்களின் மொழி, பண்பாட்டை உள்வாங்கிக் கொண்டன.

அடுத்ததாகத் தமிழினத்தை எடுத்து நோக்கினால் கிறித்துவுக்கு முறபட்ட காலம தொடக்கம் அயல் நாடுகளோடு வணிகத்தொடாபு கொண்ட இனமாக இருந்திருககிறது. தமிழா வணிக நோக்கோடு கிழக்காசியா மற்றும் மேற்காசிய நாடுகளுக்குச் சென்று வந்தனர். எந்த நாட்டிலும் குடியேறி வாழ முயற்சிக்கவில்லை.

9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் சோழப்பேரரசின் எழுச்சியோடு பல கிழக்காசிய நாடுகளிற் தமிழா செல்வாக்குப் பெற்றனா. பல நாடுகள் சோழப் பேரரசின் ஆளுமையின் கீழ் வந்தன. இருப்பினும் ஐரோப்பிய இனங்களைப் போன்று இந்நாடுகளை ஆக்கிரமித்து ஆட்சி-செய்யவில்லை என்பதுவும தமது மொழி, கலை, பண்பாடுகளை வலிந்து புகுத்தவில்லை என்பதுவும் நோக்கததக்கது. இந்நாடுகளில் இன்றும் தமிழா மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களைக் காணக் கூடியதாக உள்ளது.

13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அராபியரிடமும் 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியாிடமும் ஆட்சி உாிமையை இந்தத் தமிழினம் தன்சொந்த நாட்டில் வாழும் வழி அற்று பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்றுக் கூலிகளாகப் புலம்பெயர்ந்து ஆங்கில, பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளிற் குடிபுகுந்தனர்.

**18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளிற் புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும், புலம்பெயர்ந்த பிற இனங்களின் வரலாறும் எமக்குத் தரும் பாடம் யாதெனில் எந்த ஓர் இனம் தனது மொழி, கலை, பண்பாடுகளைப் பேணித் தன் அடையாளத்தை இழக்காது வாழ்கின்றதோ, அந்த இனமே பிற இனங்களால் மதிக்கப்படும் என்பதாகும்.**

**தமிழர் நாகரிகமானது உலகிற் தோன்றிய தொல் நாகாிகங்களுள் ஒன்றாகும். "உலகில் இதுவரை 23 நாகரிகங்கள் அரும்பி, மலர்ந்து, மணம் பரப்பியுள்ளன. அவற்றுள் 21 நாகரிகங்கள் காலத்தின் கொடுமையால் வாடிவதங்கி உலர்ந்து உதிர்ந்துவிட்டன. இரண்டு நாகரிகங்கள் மட்டுமே நிலைத்து நிற்கின்றன. இவற்றுள் ஒன்று சீன நாகரிகம் மற்றையது தமிழர் நாகரிகம் ஆகும்.'' இது வரலாற்றுப் பேராசிரியர் யே.ஏ. தாயின்பி அவர்களது (Dr. J.A Toynbee) துணிபாகும்.**

இவர்கள் குடியேறிய இடங்களிற் குறிப்பாகச் சிங்கப்பூர், மலேசியா, பாமா, ப்ஜி, மொாசியசு, சீசெல்சு, ாியூனியன், தென்னாபிாிக்கா, காியன் தீவுகள் என்பவற்றை எடுத்து நோக்குவோம.

சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் குடியேறிய தமிழா அந்நாடுகள் விடுதலைபெறுவதற்கு முன்பிருந்தே தமிழ் மொழியைத் தம்வழித்தோன்றல்கள் மறவாதிருக்க வழிதேடினா. குடியேறிய நாடுகளில் தமிழ் கற்பிக்க முயன்றனா.

மலேசியாவில் 1816ஆம் ஆண்டில் முதலாவது தமிழ்ப்பள்ளி தொடங்கியது. ஆர்வமின்மை யால் சில ஆண்டுகளில் இது மூடப்பட்டது. மீண்டும் 1834இல் தொடங்கி ஐந்து ஆண்டுகளில் மூடப்பட்டது. 1875 முதல் தமிழ்ப்பள்ளி தொடர்ந்து நடைபெற்றது. இதே போன்ற நிலையே சிங்கப்பூரிலும் நிலவியது. பர்மாவில் தமிழினம் தனித்துவமாக மொழியை இழக்காமல் மொழிக்கல்வியோடு இருந்தது.

பீஜி நாட்டிற்கு 1880ஆம் ஆண்டளவில் சென்ற தமிழர், தமிழ் மொழியை வளர்த்துத் தமது அடையாளத்தைக் காத்துக்கொள்ளப்பாடுபட்டனர். 1940ஆம் ஆண்டளவில் அங்கு ஓர் இலட்சம் தமிழர் வாழ்ந்தனர். இந்தியா சுதந்திரம் அடைந்ததும் 'நாம் இந்தியர்' என்ற உணாவு மேலோங்கப்பெற்றதாலும் வீட்டு மொழியாக இந்தி மொழியைப் பயன்படுத்தியதாலும் கலப்பு மணத்தினாலும் தமிழர் அடையாளம் இழந்துவிட்டனர்.

1985ஆம் ஆண்டின் பின்பு தமிழ்மொழி கற்க அரசு வசதி செய்து கொடுத்ததனால் இன்று மறுமலாச்சி ஏற்பட்டுள்ளது. மொாசியசிலும் ஓரளவு இதே நிலையே காணப்படுகின்றது.

ாியூனியன் தீவில் இன்று இரண்டு இலட்சம் தமிழர் வசிக்கின்றனா. இவாகள இருநூறு ஆண்டுகளுக்கு முன்னா சென்று குடியேறியோர். இவர்களில் 95 விழுக்காட்டிற்கு மேற்பட்டோா தமிழ் மொழியை மறந்துவிட்டனா.. இன்று பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழியைக் கற்க முற்படுகின்றனர். தமிழைத் தாம் கற்கவேண்டும் என்ற எண்ணம் இன்று பரவிவருகின்றது.

கயானா, ஜமெய்க்கா, சூரிநாம், கிரெனடா போன்ற காியன் தீவுகளிற் குடியேறிய தமிழா தமது மொழியை முற்றாக இழந்து விட்டனர். கலை, பணபாட்டிலும பெரும்பகுதியை இழந்துவிட்டனா. தாம் எம் மரபினர் என்ற தெளிவின்றி இந்திய மரபினா என்ற உணர்வோடு மட்டும் உள்ளனர்.

18ஆம், 19-ஆம் நூற்றாண்டுகளில புலம்பெயர்ந்த தமிழினம் தான் குடியேறிய நாடுகளிற் தனது மொழியைப் பாதுகாத்து அதன் மூலம் தன் அடையாளத்தைப பேணிக்கொள்ள முயற்சித்தது. சிங்கப்பூா, மலேசியா, பாமா போன்ற நாடுகளில் குடியேறியோா தமது தனித்துவத்தை இழக்கவில்லை. இதன் விளைவாகப் பெருமை கொண்ட மக்கள் குழாமாக விளங்குகின்றனர்.

இதேவேளை, பீஜி, மொாீசியசு, தென்னாபிாிக்கா போன்ற நாடுகளிற் குடியேறியோாிற் பெரும் பகுதியினா மொழியை இழந்ததினால் இனத்திற்குரிய சிறப்பியல்புகளை இழந்து தாழ்வுற்றுத் தனது தனித்துவத்தையும் அதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய மதிப்பினையும் இழந்து விட்டனா. இத்தாக்கத்தை உணர்ந்ததனால் மீண்டும் மறுமலர்ச்சி பெறத்துடிக்கின்றனர்.

கயானா போன்ற கரிபியன் தீவுகளிற் குடியேறியோா மொழியை இழந்தமையால் தமது அடையாளத்தை இழந்து விட்டனர். இவாகளிற் பலா பல்வேறு திறமை படைத்தவர்ாயும், பொருள் படைத்தவராயும் இருந்த பொழுதிலும் மனக்குறை கொண்டவாகளாகவே காணப்படுகின்றனா.

அதேவேளை, தமது மொழியை இழந்த இனக்குழுக்கள் பொருளாதாரத்தில் எவ்வளவு மேம்பட்டு இருந்தாலும் அது தனிமனித வளர்ச்சியாகவே பாாக்கப்படும் என்பதையும், ஓா இனத்திற்குரிய பெருமையை அவர்களாற் பெறமுடியாது என்பதையும் கண்ட மொரீசியசு, ப்ஜி, ாியூனியன், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் குடியேறிய தமிழர் இப்பொழுது மொழியைக் கற்பிப்பதன் மூலம் மறுமலாச்சியைப் பெறுக்கொள்ள முயற்சிக்கின்றனா.

18ஆம் நூற்றாண்டுகளிற் புலம்பெயாந்த தமிழருக்குத் தமது தாய் நாட்டோடு தொடாபு இருக்கவில்லை. புலம்பெயாந்தோாில் பெரும் பகுதியினா கல்வியறிவு அற்றவா. அவ்வேளையில் தாய் நாடும அயலவர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.

புலம் பெயாந்து வாழும் நாடுகளிலும் அந்நாட்டு அரசுகள் தாய்மொழியைக் கற்பிக்கவில்லை. பெரும்பாலும் கல்வியே புகட்டப்படவில்லை. சமய உணர்வு ஒன்றே இவர்களை இணைத்து வைத்திருந்தது.

தாம் பொருளாதாரத்திலும் புற வாழ்விலும மேம்பட்டிருந்த போதும் தமிழ் மொழியை இழந்து அடையாளத்தைத் தொலைத்தன் மூலம் ஏற்பட்ட துன்ப வரலாற்றின் ஊடேயும் இன்று மீண்டும் பல நாடுகளிலும் மறுமலர்ச்சி பெற்றுத் தத்தம அடையாளங்களோடு வாழ்வதே சிறப்பு என்ற எண்ணம் மேலோங்கி வருவது பாராட்டுக்குரியது. தம் தனித்துவத்தைப் பேணுவதே தமக்குப் பெருமை என்பதையும் அதற்கு ஒரே வழி தாய்மொழி கற்றிருப்பதே என்பதையும் அம்மக்களுக்கு வரலாறு புகட்டியுளளது.

இன்று தமிழீழ விடுதலைப் போாினால் புலம்பெயாந்த எம்மக்களுக்கு அவர்களைப்போன்ற துன்பச் சூழ்நிலை இல்லை. தமிழ்மொழியைக் கற்பதற்கு எவ்வித தடையும இல்லை. நாம் குடியேறிய நாடுகள் தாய்மொழி கற்பதை ஊக்குவிக்கின்றன. மேலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள் தாய் மொழியைக் கற்பிக்கப் பெரிதும் முயன்று வருக்கின்றன.

புலம்பெயர்ந்து வாழும் மண்ணின் வாசனைகேற்ப பாடத்திட்டங்கள் அமைத்துச் செயற்படுகின்றன. நமது தாய் நாட்டுடனும் நெருங்கிய தொடர்பு உண்டு, அங்கிருந்து தேவையான உதவிகளும் கிடைக்கின்றன.

இவ்வாறு இன்றைய புறச்சூழல் வாய்ப்பாக இருக்கும் அதேவேளை, தாய் மொழி கற்பதன் இன்றியமையாமையை உணாந்து, தமிழ்மொழி அறிவினைப் பெறுவது, வலிமைமிக்க வழித்தோன்றல்களை, குடும்பத்தை, சமூகத்தை, உருவாக்குவதோடு பெருமைமிக்க இனம் என்னும் நிலையையும் பெற்றுத்தரும்.

நமது அடுத்த தலைமுறையைச் சரியாக உருவாக்கக் கிடைத்த வாய்ப்பை நாம் தவறாது பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை உலகில் புலம்பெயர்ந்து வாழ்ந்த இனங்களின் வரலாற்றின் மூலம தமிழர் கற்றுக்கொண்டார்களா? என்பது வினாக் குறியேயாகும்.

**இணையத்தளப் பார்வை**

இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வளமான மொழி, கலை, பண்பாடு, கணிதம், வானியல், கட்டடம், மருத்துவம் அன்ன பிறதுறைகளில் மேலோங்கியிருந்த தமிழினம் இன்று நலிந்து காணப்படுகின்றது. இன்று அதன் உயாிய விழுமியங்களை எமது தலைமுறை பெற்றுக்கொள்வதன் மூலம் தன்குடும்பத்தோடும், சமூகத்தோடும் இயைந்து வாழக்கூடியவாகளாக உருவாக்க முடியும். எமது பிள்ளைகளை வீட்டிலும் நாட்டிலும் சிறந்து விளங்கக் கூடியவாகளாக வளர்தெடுப்போம். □

# சட்டவிரோத மணல் அகழ்வு; மூவருக்கு ரூ.45 ஆயிரம் அபராதம்

(துன்னாலை)

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட வரணி இயற்றாலையைச் சேர்ந்த 3 லொறி சாரதிகளைக் கபபுது வெளிப் பகுதியில் வைத்து மணலுடன் நெல்லியடிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த மூன்று லொறிகளையும் கைப்பற்றிய பொலிஸார்,சாரதிகள் மூவரையும பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய வேளை இவர்கள் விளக்க மறியலில வைக்கப்பட்டனர்.

மீண்டும் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் இது விளக்கத்திற்கு எடுக்கப்பட்டவேளை மூவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதால் மூவருக்கும் தலா 15 ஆயிரம ரூபா வீதம் செலுத்துமாறு மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் உத்தரவிட்டார்.

அத்துடன் குறித்த மூன்று லொறி மணலையும் பறிமுதல் செய்து பொது நிறுவனங்களுக்கு வழங்கவும் பணித்தார்.

(ந-101)

# சுற்றுலாத்துறை அபிவிருத்திக் கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில்

(கொழும்பு)

சுற்றுலாத் தொழிலை அபிவிருத்தி செய்யும் வகையில் சுற்றுலா கண்காட்சி, விளையாட்டுப் போட்டிகள், கலாசார நிகழ்ச்சிகள் போன்ற நடவடிக்கைகளை அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது.

இலங்கை தெற்காசிய நாடுகளுக்கான நுழைவாசல் என்ற தலைப்பில் இவை அனைத்தும் இடமபெறும். இங்கு வந்து சேரும் சுற்றுலாப் பயணிகளை இலக்காக வைத்து இந்த நிகழ்ச்சிகள நடாத்தப்படவிருக்கின்றன.

சுற்றுலா அமைச்சின் மேலதிக செயலாளர் ஜோஜ் மைக்கல் தகவல் தருகையில், நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து வரும் உல்லாசப் பயணிகள் இந்த நிகழ்சசிகளில் பங்குகொள்வார்கள் எனத் தெரிவித்தார்.

இலங்கைக்கு முதற் தடவையாக வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர் வரும் 3ஆம் திகதி தொடக்கம் இரண்டு நாட்களுக்கு அந்த நிகழ்ச்சி இடம்பெறும். அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க இந்த நிகழ்சசிகளை ஆரம்பித்து வைப்பார். (அ-5)

# கட்டவிழுந்த பெண்ணை வெட்டிக் கொன்ற பாதகன்

அச்சிடப்பட்ட திருமண அழைப பிதழின் மாதிரிப் பிரதியை தனது மாமனார் பழனியிடம் காட்டுகிறான சக்திவேல்.

மணமகன் - சக்திவேல்
மணமகள் - நித்தியா
திருமண நாள் - 18.11.2004

இன்னும் ஓரிரு நாட்களில் அழைப்பிதழ் முழுவதும் அச்சிடப்பட்டுவிடுமென பழனியிடம் கூறுகிறான். ஆதலால் இப்பொழுது அத்திருமணம் இனிது நிறைவேறியிருக்கும்.

மணமக்கள் குதூகலமாக எங்காவது ஓர் ஊரில் தேனிலவைக் கழித்துக் கொண்டிருப்பார்கள் என யாராவது நினைத்தால் அதுதான் தப்பு.

இப்பொழுது மணமகன் இருப்பது சிறையில். மணமகள் இருப்பது???? அழகியான மணமகள் நித்தியா பத்துததடவை கத்தியால் குத்திக கொல்லப்பட்டு விட்டாள். யாரால்? அவளுக்குத் தாலி கட்டவென நிச்சயிக்கப்பட்டிருந்த மணமகன் சக்திவேலால்.

பத்துமுறை கத்தியால் குத்திக கொலை செய்து காட்டுப் பகுதியில் எறிந்து விட்டு ஓடிய மணமகன் சக்திவேல் இப்பொழுது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் தண்டனைக் காலத்தை எதிர்பார்த்துக கொண்டிருக்கிறான்.

நித்தியா - வயது 21 சென்னை பல்கலைக்கழகத்தில் பி.பி.ஏ. இரண்டாம் ஆண்டு மாணவி. தந்தை பெயர் பழனி. இந்திய அரசின் கடலோரக் காவல்படையில் கான்பூரில் முப்பது ஆண்டுகள் பணியாற்றி, ஓய்வு பெற்றதும் சென்னைக்கு வந்து வீடு கட்டிக் கொண்டு வாழத் தொடங்கியவர். நித்தியாவும் அவரது இரு சகோதரர்களும் கான்பூரிலேதான் பிறந்தார்கள்.

இவரது மகள் நித்தியாவுக்கும் தாய் மாமனான சக்திவேலுவுக்கும் திருமணம் பெரியோர்களால நிச்சயிக்கப்பட்டது.

## மாயமாய் மறைந்த மங்கை

நவம்பர் மாதம் 3ஆம் திகதி அதாவது திருமணநாளுக்கு இரு வாரங்களுக்கு முன் உறவினர் வீட்டுக்குச் சென்ற நித்தியா பின்னர் வீடு திரும்பவேயில்லை. எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தார்கள்.

மணமகன் சக்திவேலும் இவர்களுடன் சேர்ந்து தேடிவிட்டு மாமியார் கையால் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் போயிருக்கிறான்.

மூன்று நாட்கள் கழித்து நவம்பர் மாதம் 6ஆம் திகதி பொலிஸார் செவ்வாய்ப்பேட்டை அங்காள பரமேஸ்வரி கோவிலுக்கும் ரயில்வே லயினுக்கும் இடையே உள்ள மறைவிடத்தில் ஒரு பெண்ணின் உடலைக் கண்டிருக்கிறார்கள். உடல் எங்கும் மொத்தமாக 10 கத்திக் குத்து, வெட்டுக்காயங்கள்.

அம்பத்தூரையடுத்த அயன் பாக்கம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் 12ஆவது மெயின் ரோட்டில் உள்ளது பழனியின் வீடு. சோகம் நிறைந்த முகத்துடன் அவர் வட்டு வாசலில் குழுமி இருக்கிறது பெண்களின் கூட்டம்.

சென்னை வந்து சொந்த வீட்டில் குடியேறிய பிறகுதான் நித்தியா சக்திவேலைக் கண்டிருக்கிறாள். சக்திவேல், நித்தியாவின தாயின் அண்ணன் மகன்.

தாய் மாமன் மகன் அவனுக்குத் தாய் தந்தை இல்லை. ஒரு தம்பி மட்டும்தான். அக்கம் பக்கத்தில் வட்டிக்குப் பணம் கொடுத்துக் கொஞ்சக் காலமாகச் செழிப்பாக இருந்துவருகிறான். சக்திவேலுவுக்குத் தன் பெண்ணைக கொடுப்பதில் நித்தியாவின் தந்தை பழனிக்கு விருப்பமில்லை.

நித்தியாவின் தாய்தான் தன் பெண்ணை அண்ணன் மகனுக்குத் தரவேண்டுமென அடம்பிடித்தாள்.

மனைவியின் விருப்பத்துக்கு மகள் மறுப்பேதும் சொல்லாததால் பழனியும் வேறு வழியின்றிச் சம்மதித்தான். மனைவியின் விருப்பத்தைத் தன் விருப்பமாகத் கொண்டு நிச்சயதார்த்தத்தைத்தையும் வெகு அமர்க்களமாக நடத்தி விட்டான் பழனி. திருமணநாள் குறிக்கப்பட்டது. திருமணப் பத்திரிகை அச்சிடும் பொறுப்பைச் சக்திவேல் ஏற்றுக் கொண்டான்.

## பணப் பிசாசின் பயங்கர நடவடிக்கை

வட்டித் தொழில் செய்து வரும் சக்திவேல் பணத்தில் வெகு கெட்டி. ஒரு சதம் செலவிடுவதென்றாலும் ஒன்பது தரம் யோசித்த பின்னரே செய்வான்.

நிச்சயதார்த்த நாள் வரை அமைதியாக இருந்த சக்திவேல் மனதில் நிச்சயதார்த்தம் முடிந்ததும் சாத்தான் குடிபுகுந்துவிட்டான்.

நிச்சயதார்த்தக் கணக்கைப் பார்த்த சக்திவேல், நிச்சயதார்த்தத்துக்கே இவ்வளவு செலவு என்றால், நடக்கப் போகும் திருமணத்துக்கான செலவு எவ்வளவு வரும் எனக் கணக்குப் போட்டுப் பார்த்தான்.

திருமணச் செலவு, கலியாண மண்டபச் செலவு, விருந்துபசாரச செலவு, வரதட்சனை என்று கணக்குப போட்டுப் பார்த்ததில் பல இலட்சம் உருண்டோடுவதைக் கண்டான. இப்படி வீணாகச் செலவு செய்யும் பணத்தை தன்னிடம் தந்தால் வட்டிக்கு விட்டு நிறையப் பணம் பார்க்கலாமே எனக் கணக்குப் போட்டான்.

முதலில் நித்தியாவின் பெற்றோர்களுடன் இதைப் பற்றிப் பேசிப் பார்த்திருக்கிறான். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

தங்களுடைய ஒரே மகளுக்கு ஊரை அழைத்து முடிந்தவரை நகைபோடடுக் கண்குளிரத் திருமணம் நடததிப் பார்க்கவேண்டுமென்று எல்லாப் பெற்றோர்களையும போலவே இவர்களும் ஆசைப் பட்டார்கள்.

இத்திருமணத்தை ஒரு கோவிலிலோ அல்லது திருமணப்பதிவு அலுவலகத்திலோ நடத்திவிட்டால செலவு சில ஆயிரங்களுடன் முடிந்துவிடும். அப்பணத்தை என்னிடம் தந்தால் வட்டிக்கு விட்டு பெருந் தொகை இலாபத்தைக் காட்டுவேன் என்று நித்தியாவிடமும் கூறிப்பார்த்திருக்கிறான்.

இதற்கு நித்தியா ஒப்புக் கொள்ளாததால் அவர்களுக்கிடையில காரசாரமான விவாதம் நடைபெற்றது. ஒரு கட்டத்தில், அவன் பேச்சால் ஆத்திரமடைந்த நித்தியா, வரதட்சனையை வற்புறுத்தினால் பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டி வரும் என்றும் எச்சரித்திருக்கிறாள்.

கான்பூரில் பல தரப்பட்ட மாணவர்களுடன் சேர்ந்து படித்ததால் நித்தியாவுக்கு மனத்திடம் அதிகம். அதினாலேயே தனக்குக் கணவனாக வரவிருப்பவனுடன் கடுமையாக வாதடுகிறாள்.

தனது ஏற்பாட்டுக்கு நித்தியா ஒப்புக்கொள்ளமாட்டாள் என்பதை அறிந்த சக்திவேல், 'உனது நகைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு வா நாங்கள் பதிவுத் திருமணம் செய்து கொள்வோம்' என்று கூறியிருக்கிறான். இதற்கும் நித்தியா ஒப்புக் கொள்ளவில்லை.

ஆரம்பத்திலேயே நித்தியாவின் தந்தை பழனிக்கு இத்திருமணத்தில விருப்பம் இல்லை. தனது ஆறு சகோதரர்களில் யாராவது ஒருவருடைய மகனுக்குத்தான் தனது மகளைக் கொடுக்க வேண்டுமென்று நினைத்திருக்கிறான் ஆனால் மனைவியின் விருப்பம் வேறாக இருந்ததால் கடைசியில் அவள் விருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

இப்பொழுது சக்திவேல் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்ததும அவர் கோபம் அதிகமாயிற்று. இருந்தாலும் சக்திவேலும் நித்தியாவும் தொடர்ந்து சந்தித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள்.

## பாதகன் மனதில் பயங்கர திட்டம்

சம்பவம் நிகழ்ந்த தினத்தன்று, முன்னரே பேசிக் கொண்டபடி இருவரும் செவ்வாய்ப் பேட்டைக்குப் போயிருக்கிறார்கள். போகும் வழியிலும் இருவரும் காரசாரமாகப பேசிக்கொண்டும் சண்டையிட்டுக் கொண்டும் போனதை இவர்களுடன் ரயிலில் பிரயாணம் செய்த பலர் கண்டிருக்கிறார்கள்.

வழியில் இருவரும் அங்காள பரமேஸ்வரி கோவிலுக்குப் போய சாமி கும்பிட்டிருக்கிறார்கள். அங்காள பரமேஸ்வரி கோவிலுக்கும் செவ்வாய்ப்பேட்டை ரயில் நிலையத்துக்குமிடையே ஒரு பெரிய முட்காடு இருக்கிறது. திருடர்கள் தவிர வேறுயாருமே நுழைய அஞ்சும் தனி இடம் அது.

அதற்குள் நித்தியாவை அழைத்துக் கொண்டு போயிருக்கிறான் சகதிவேல். எனக்குக் கணவனாக வரப்போகிறவனுடனே தானே போகிறேன் எந்த ஆபத்தும் தனக்கு கணவனாக வரப் போகிறவனை மீறி நடக்காது என்ற தைரியத்தில் அவனோடு போயிருக்கிறாள நித்தியா. ஆனால் அந்தக் கயவன்தான் தனககு எமன் என்பதை அந்தப் பேதை அப்போது அறிந்திருக்கவில்லை.

அப்போது அந்த முட்காட்டுக்குள் 2,3 பேர் மாத்திரம் ஆடு மேதத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இவர்கள் இருவரைக் கண்டபோதிலும் அவ்வளவாகப் பொருடபடுத்தவில்லை.

சக்திவேலும் நித்தியாவும் ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து பேசத் தொடங்கினார்கள். கோவிலிலிருந்து கொண்டு வந்த தேங்காய முடிகளை உடைத்துச சாப்பிட்டவாறே பேசினார்கள். பின்னர் என்ன நடந்தது என்பதற்கு சக்திவேல் பொலிஸில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைத் தவிர வேறு ஆதாரம் எதுவுமில்லை.

## கத்தியால் குத்தப்பட்டு கன்னி படுகொலை

சக்திவேலின் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவர்கள் பேசட் பேசச் சண்டை வலுத்திருக்கிறது. தனது பேச்சு எடுபடாமல் போன ஆத்திரத்தில் சக்திவேல் தனது பையில் வைத்திருந்த கத்தியை எடுத்து நித்தியாவை சரமாரியாகக் குத்தியிருக்கிறான். மொத்தம் 10 காயங்கள கையிலே, கழுத்திலே எனப்பல இடங்களில். அவள், மாமா, மாமா எனக கதற வாயிலும் வெட்டு இத்தனை குத்துக்களை வாங்கிக்கொணடும் நித்தியா நிலத்தில் விழுந்துவிடாமல் நிற்பதனைக் கண்ட சக்திவேலுக்கு அளவு கடந்த ஆத்திரம் 'நீ இன்னுமா சாகாமல் இருக்கிறாய்' என்று கூறியபடி அவள் வயிறறில் பல தடவை குத்தியிருக்கிறான். இந்நிலையில் உயிர் பிரிய நித்தியா பிணமாக நிலத்தில் சரிகிறாள்.

உயிரற்ற நித்தியாவின் உடலைச் சரசர என்று இழுத்துப் போய முட்காட்டில் இருந்த கிடங்கு ஒன்றுககுள் போட்டுவிட்டு ஏதுமறியாத அப்பாவி போல ஊருக்குத் திரும்பியிருக்கிறான் சக்திவேல்.

கொலைச் சம்பவம் நடந்த மறுநாள், திருமணப் பத்திரிகையின் பிரதியொன்றை எடுத்துக் கொண்டு பழனியிடம் வந்திருக்கிறான் சக்திவேல்.

மாமா இதுதான் நமது கலியாணப் பத்திரிகை. நாளை பூராகவும் அச்சாகிவிடும். உங்களிடம் நேரில் கொண்டு வந்து தருவார்கள் என்கிறான்.

திருமண ஏற்பாடுகளைக் கவனிக்கத் தனது வீட்டில் பெண்கள் எவருமில்லததால், பக்கத்தூருக்குச் சென்று தனது சகோதரி முறையான ஒருவரை அழைத்து வரப் போவதாகவும், மறுநாள் திரும்பி விடுவதாகவும் கூறியிருக்கிறான்.

நேரம் நண்பகலாகி விட்டதால் மாமியாரிடமே உணவு தரும் படி கேட்டிருக்கிறான். மருமகப்பிள்ளை என்ற எண்ணத்தில் அவளும் கோழி அடித்து அவனுக்கு உணவு கொடுத்திருக்கிறாள்.

நித்தியாவைக் குத்திக் கொன்ற சக்திவேல், நிச்சயதார்த்தத்தின் போது அவளுக்குப் போட்ட இரணடு மோதிரங்கள், மற்றும் அவள் அணிந்திருந்த நகைகளையெல்லாம் எடுத்துவந்து ஒரு கடையில் அடகு வைத்திருக்கிறான்.

அவை தன்னைக் காட்டிக் கொடுக்கும் தடையப் பொருட்கள் என்று அறியாமல் நகைகள் மூலம் கிடைத்த பணத்தை வீட்டில் பெட்டியில பத்திரப்படுத்திவிட்டு அயலூர் சென்றிருக்கிறான்.

மூன்று நாட்கள் இரவும் பகலுமாகத் தேடியும் நித்தியா கிடைக்கவில்லை. இதற்கிடையில் செவ்வாய்ப் பேட்டை முட்காட்டுக்குள் அழுகிய நிலையில் ஓர் இளம் பெண்ணின் உடல் கிடப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைகிறது.

அழுகிய நிலையில் கிடந்த பிணத்தின் பிரேத பரிசோதனை நடந்துகொண்டிருந்த நேரம் நித்தியாவின் பெற்றோரும் அங்கு சென்றிருக்கிறார்கள்.

மணக்கோலத்தில் காட்சி தர வேண்டிய மகளை பிணக்கோலத்தில் கண்ட பெற்றோர்களின் கதறலைக் கேட்டு அந்தக் காட்டு மரங்களே கலங்கி நின்றன.

நித்தியாவைத் தேடிச் சென்றவர்களுடன் சக்திவேலும் சென்றிருந்தான்.

நித்தியாவின் உயிரற்ற உடலில் விழுந்து விடுபவன் போல அழுது அரற்றி நாடகமாடியிருகக கிறான்.

நித்தியாவும் சக்திவேலும் சம்பவம் நடந்த தினத்தன்று ஒன்றாகச் சென்றதையும் சண்டை பிடித்துக் கொண்டதையும் ரயில்வே ஊழியன் ஒருவன் கண்டிருக்கிறான்.

## வினை விதைத்தவன்....

நித்தியாவின் பிணத்தைப் பொலிஸார் பரிசோதனை செய்து கொண்டிருந்த நேரத்தில் அந்த இடத்துக்கு வந்த அந்த ரயில்வே ஊழியன் சக்திவேலைக் கண்டதும் அதிர்ச்சிடைந்தான்.

சம்பவம் நடந்த தினத்தன்று நித்தியாவுடன் கூடப் போனவன் என்பதை அச் சிப்பந்தி பொலிஸ் காதில் மெல்லக் கூறுகிறான்.

பொலிஸார் சக்திவேலைக் காவல் நிலையத்துக்கு அழைத்து விசாரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

முதலில் தனக்கு ஒன்றுமே தெரியாது எனச் சக்திவேல் அடம பிடித்திருக்கிறான். இதனால் ஆத்திரமடைந்த பொலிஸ் கண்காணிப்பாளர்,

'எடடா அந்த லத்தியை' என உரத்த குரலில் உத்தர விட்டதும சக்திவேல் கதி கலங்கி விட்டான். பயத்தினால் நடந்த அத்தனை உண்மைகளையும் கக்கி விட்டான்.

பொலிஸ் விரைந்து செயற்பட்டது. அவனது வீட்டைச் சோதனையிட்ட பொழுது நகைகளை அடகு வைத்த ரசீதும், கணிசமான தொகை பணமும் கண்டெடுக கப்பட்டது. நகை அடகு வைத்த கடையிலிருந்து அத்தனை நகைகளும் மீட்கப்பட்டன.

பொ.இராசதுரை

நகைகளைக் கண்ட நித்தியாவின் பெற்றோர் கதறியழுததைக் கண்டு காவல் நிலையமே கண்ணீா வடித்தது.

சக்திவேல் இப்பொழுது தண்டனையை எதிர்பார்த்து சிறைச்சாலையில் இருக்கிறான்.

அவனது தம்பியை நித்தியாவின் உறவினர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்க அவன் அந்த ஊரை விட்டே போய்விட்டான்.

நித்தியாவின் வீட்டிலோ....? ஊர் சிறக்கத் திருமணம் நடத்திப் பார்க்கவேண்டுமென எண்ணியிருந்த ஆசை மகள் அநியாயமாகக் கொலைசெய்யப்பட்ட அதிர்ச்சியால் தகப்பன் பழனி படுத்தபடுக்கையாகிவிட்டான்.

அண்ணன் மகனுக்கு நித்தியாவைக் கட்டிவைக்க வேண்டுமென்று தான் பிடிவாதம் பிடித்ததால்தானே நித்தியாவை இழக்க நோர்ந்தது என்பதை நினைத்து நினைத்து பித்துப்பிடித்த நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டாள் தாய் குப்பம்மாள்.

குருவிக்கூடாக வாழ்ந்த அந்தச் சிறு குடும்பம் சம்மட்டி அடிபட்ட வைரக்கல்லைப் போலச் சிதறிக் சின்னாபின்னப்பட்டுவிட்டது. □

# பிரிட்டன் ஆலையில் இருந்து அணு கதிரியக்க திரவம் கசிவு

(இலண்டன்)

பிரிட்டனில் மிகவும் சக்திவாய்ந்த அணு கதிரியக்க திரவம் கசிந்துள்ளது. கடந்த 13 ஆண்டுகளில் நடந்த மிகவும் மோசமான விபத்து இது.

இச்சம்பவம் பிரிட்டனில் செல்லா.ீ.பீல்டில் உள்ள பிரிட்டிஷ் தோர்ப் ரீபுராசஸிங் ஆலையில் நடந்துள்ளது.

இதுகுறித்து 'இண்டிபெண்டண்ட் ஆன் சண்டே' நாளோடு வெளியிட்டுள்ள செய்தியில்,

இந்த ஆலையில் கடந்த மாதம் வெளியிடப்பட்ட மனிதக் கோளாறு மற்றும் இயந்திரக் கோளாறு குறித்த தகவல் அறிக்கை மூலம் இது வெளியில் தெரியவந்தது. கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலே அணு கதிரியக்கத் திரவம் கசிந்துள்ளது.

ஒலிம்பிக் நீச்சல் குளத்தில் பாதியளவுக்கு அணு கதிரியக்கத் திரவம் வெளியேறி சிறு குட்டையாக உருவாகியுள்ளது. இந்த ஆலையில் நடத்தப்பட்ட சோதனை அறிக்கையின் நகல் மூத்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நிறுவன ஊழியர்களின் கவனக்குறைவு மற்றும் பழுதடைந்த குழாய்கள் காரணமாகவே இந்த விபத்து நடந்துள்ளது என்பதை இத் தொழிற்சாலை ஒப்புக்கொண்டது.

அணு திரவம் சென்று கொண்டிருந்த குழாய்களில் விரிசல்கள் ஏற்படும்போது வெளிப்படும் எச்சரிக்கை சமிக்ஞைகளை ஊழியர்கள் கண்டுகொள்ளாமல் இருந்ததும், குழாய்கள் மிகவும் மோசமாக வடிவமைக்கப்பட்டிருந்ததும் தான் கசிவுக்குக் காரணம் என்றும் அந்நிறுவனம் கடந்த சனிக்கிழமை ஒப்புக் கொண்டது.

இதையடுத்து, அந்த ஆலையின் இதர குழாய்களிலும் விரிசல் ஏற்பட்டுளளது குறித்து கண்டறியுமாறு அந்நிறுவனம் உத்தரவிட்டுள்ளது.

மோசமான இந்த விபத்து நடந்துள்ளதால் கொங்கோ நாட்டவருக்குச் சொந்தமான இந்த ஆலையை மீண்டும் இயங்கச் செய்வது கடினம் தான் என்று பிரிட்டிஷ் அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

83 ஆயிரம் லீற்றர் அணு கதிரியக்கத் திரவம் கசிந்து சிறு குட்டையாக உருவாக்கியுள்ளதை அதிகாரிகள் கடந்த மாதம் 19ஆம் திகதிதான் கண்டுபிடித்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# பாலஸ்தீன அகதிமுகாம் மீது இஸ்ரேல் ஏவுகணை வீச்சு

(காசா)

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன நாடுகளுக்கு இடையே அடிக்கடி மோதல் நடந்து வருகிறது. பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியை இஸ்ரேல் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருக்கிறது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இதையடுத்து கடந்த சில வாரங்களாக எல்லையில் எந்தவித மோதலும் இல்லாமல் இருந்தது.

இந்த நிலையில், எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் பாலஸ்தீன நாட்டில் காசா நகரின் வடக்குப் பகுதியில் உள்ள ஜபாலியா அகதிகள் முகாம் மீது நேற்று முன்தினம் இஸ்ரேல் விமானப்படை விமானம் ஏவுகணைகளை வீசி அதிரடித் தாக்குதல் நடத்தியது.

மொத்தம் 3 ஏவுகணைகள் வீசப்பட்டன. இதில் முகாம் தீப்பற்றி எரிந்தது. இதில் 2 பேர் பலியானதாக தகவல்கள் கூறுகின்றன. தொடர்ந்து காசா நகரை சுற்றி கடற்படை மற்றும் இராணுவப்படைகளை இஸ்ரேல் நிறுததி இருக்கிறது, காசா நகரில் பதுங்கி இருக்கும் தீவிரவாதிகளை தாக்கப் போவதாக இஸ்ரேல அறிவித்து இருக்கிறது. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, அமெரிக்கா மேற்கொண்ட சமாதான நடவடிக்கையின் அடிப்படையில் இஸ்ரேல் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் 400 கைதிகளை விடுதலை செய்ய முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

இது தொடர்பாக இஸ்ரேல் மந்திரிசபை கூட்டத்தில் வாக்குகெடுப்பு நடாத்தப்பட்டது. இதற்கு 18-3 என்ற கணக்கில் மந்திரி சபை அனுமதி அளித்தது. (ற)

# நிலக்கரிச் சுரங்கத்தில் வெள்ளம் புகுந்தது

(பிஜீங்)

சீனாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் வெள்ளம் புகுந்ததில் 12 தொழிலாளர்கள் சிக்கியுள்ளனர். இவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது.

பியுஜியான் மாகாணத்தில் உள்ள சிகெங் நிலக்கரிச் சுரங்கத்தின் ஒரு பிரிவில் 14 தொழிலாளர்கள் கடந்த சனிக்கிழமை வேலை செய்துகொண்டிருந்தனர். அப்போது அங்கிருந்த சுரங்கக் குழியில் தண்ணீர் கசிவு ஏற்பட்டு இப்பிரிவுக்குள் வெள்ளம் புகுந்தது.

இதில் 2 பேர் தப்பினர். மீதமுள்ள 12 பேரைத் தேடும் பணி தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. (ற)

# இந்தியா - ரஷ்யா - சீனா முத்தரப்பு பேச்சு இவ்வாரம் ரஷ்யாவில் நடைபெறும்

(புதுடெல்லி)

பல்வேறு முக்கியப் பிரச்சினைகள் குறிதது விவாதிக்க இந்தியா - ரஷ்யா - சீனா ஆகிய 3 நாடுகளினதுப் முத்தரப்புப் பேச்சுவார்த்தை இந்தவாரம் ரஷ்யாவில் உள்ள விளாடிவாஸ்டாக் நகரில் நடைபெறவுள்ளது.

இந்தியா - சீனா - ரஷ்யா, ஆகிய 3 நாடுகளினதும் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கடந்த 2002,2003ஆம் ஆண்டுகளில் ஐ.நா பொதுச்சபைக் கூட்டங்களின்போது நேரடியாகச் சந்தித்துப் பேசியுள்ளனர். கடந்த 2004ஆம் ஆண்டு அலமாட்டியில் நடைபெற்ற ஆசிய நாடுகளிடையிலான நம்பிக்கை வளர்ப்பு மாநாட்டின் போது 3ஆவது முறையாக இவர்கள் சந்தித்துப் பேசினர்.

இப்படி 3 முறை இவர்கள் நேரில் சந்தித்துப் பேசி இருந்தாலும், இப்போது முதன்முறையாக இவர்கள் மூவரும் முத்தரப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது இதுதான் முதல் முறையாகும்.

பல்வேறு முக்கிய விஷயங்கள், பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் இந்திய - சீனா -ரஷ்யா ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் முத்தரப்பு மாநாடு ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் உள்ள துறைமுக நகரமான விளாடிவாஸ்டாக்கில் இவ்வாரம் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங், ரஷய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜிலாங்ரோ., சீனா வெளியுறவுத் துறை அமைச்சர் லீ-ஜாவோஜியாங அகியோர் விளாடிவாஸ்டாக் நகரில் எதிர்வரும் புதன் கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் சந்தித்துப் பேச இருக்கிறார்கள். பல்வேறு துறைகளில் உள்ள 3 நாடுகளுக்கு இடையே புதிய ஒத்துழைப்பை நல்குவது தொடர்பாகவும் இது தொடர்பான செயல்பாடுகளுக்கு ஊக்கமளிப்பது தொடர்பாகவும் இந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

இந்த முத்தரப்பு மாநாடு எந்த நாட்டையும் குறிவைத்தோ, ஒரு அதிகார பலத்தை உருவாக்குவது குறித்தோ இருக்காது என்று இந்திய வெளியுறவுத்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன. இன்று செவ்வாய்க்கிழமை ரஷ்யா புறப்பட்டுச் செல்லும் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் விளாடிவாஸ்டாக்கில் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சருடன் தனியே சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேசுவார். (ற)

# சீனாவில் பழங்கால கல்லறை கண்டுபிடிப்பு

(பிஜீங்)

சினாவில் பழங்காலத்தைச் சேர்ந்த 17கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவை கி.மு.403-221 காலகட்டத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

வடக்கு சீனாவில் உள்ள மெங்கோலியா சுயாட்சிப் பிரதேசத்தில் அதிவேக விரைவு நெடுஞ்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அப்போது இக் கல்லறைகள் தென்பட்டன.

இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் 17 கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இறந்தவர்களின் உடல்கள் பெரிய ஜாடிகள், மண் பானைகளில் வைத்து கல்லறைகள் புதைக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

அப்பகுதியில் தொடர்ந்து அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற)

## இந்தியா - பாக் . உறவில் புதிய அத்தியாயம்

# காஷ்மீரின் ஒரு பகுதிக்கு சுயாட்சி

(சிம்லா)

இந்தியா, பாகிஸ்தான் உறவில் புதிய அத்தியாயமாக காஷ்மீரின் ஒரு பகுதிக்கு சுயாட்சி வழங்க முஷாரப்பின் யோசனையை ஏற்று மன்மோகன்சிங் சம்மதம் தெரிவித்துள்ளார்.



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இமாசல் பிரதேச மாநிலத்தில் கடந்த 2 நாளாக சுற்றுப் பயணம் செய்தார்.

ஜாக்ரி என்ற இடத்தில் 1500 மெகாவாற் நீர் மின்நிலையத்தைத் தொடக்கி வைத்து மினசார மந்திரிகள் கருத்தரங்கில் அவர் பேசினார். நேற்று முன்தினம் டெல்லி புறப்படும் முன் தலைநகர் சிம்லாவில் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

மத்தியில் எனது தலைமையிலான அரசுக்கும் இடது சாரி கட்சி நண்பர்களுக்கும் இடையே நல்ல உறவு நீடிக்கிறது. சில பிரச்சினைகளில் அவர்களுக்கு எங்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் அந்தப் பிரச்சினைகளுக்கு சுமுகமான முறையில் தீர்வு காணப்படுகிறது. குறைந்த பட்ச பொது செயல் திட்டத்தில் கூறப்பட்டு உள்ள இலட்சியங்களை அடைவதற்காக நாங்கள் இணைந்து பணியாற்ற முடியும என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்தியா - பாகிஸ்தான் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அனைத்து பிரச்சினைகளுககும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண உண்மையான முயற்சியை மேற்கொண்டு இருக்கிறோம். சில சந்தர்ப்பங்களில் தடங்கல் ஏற்படுகிறது. நம்பிக்கை ஊட்டும் நடவடிக்கைகளை பலப்படுத்தவும் இருநாட்டு மககளுக்கு இடையே உள்ள நேரடி தொடர்பை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சியாச்சின் எல்லைப் பகுதியில் படைகளை குறைப்பது தொடர்பாக இருநாட்டு பாதுகாப்பு துறை செயலாளர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

காஷ்மீரின் ஒரு பகுதிக்கு சுயாட்சி வழங்கி பரீட்சார்தத அடிப்படையில் பார்க்கலாம் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறி இருக்கிறார். அந்த யோசனை வரவேற்கத் தக்கது என்று அவர் குறிப்பிட்டார். (ற)

# வீடு தேடி வரும் 'மொபைல் சுடுகாடு'

(கொச்சி)

ஊரில் மயானம் இல்லை: மயானத்துககு பாதை இல்லை: மயானம் அமைக்க இடம் இல்லை: இருக்கும் மயானத்திலும் உடல்களை புதைக்கவோ, எரிக்கவோ இடமில்லை என்ற பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் இனி கவலைப்பட வேண்டியதில்லை.

இனி சுடுகாட்டைத் தேடிப்போக வேண்டியதில்லை. சுடுகாடு நம்மைத் தேடி வரப்போகிறது. பயப்படாதீர்கள். கேரளத்தைச் சேர்ந்த சிவராமகிருஷ்ணன் 'மொபைல் சுடுகாடு' (நடமாடும் மின்மயானம்) என்ற ஒரு இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்.

கொச்சியைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் ஹைடெக் சீல்ஸ் நிறுவனத்தின் தலைவரான சிவராமகிருஷ்ணன் இது பற்றிக் கூறுகையில்,

திருச்சூர் மாவட்டம் சாலக்குடியில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த மயானம் இருக்கிறது. அந்த மயானத்தில் இடமில்லை என்ற நிலை ஏற்பட்டதால், மேலும் இடம் வாங்கி அதை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

குடியிருப்புப் பகுதிக்கு அருகில் மயானம வநதால் தண்ணீர் மாசுபடும், நிலம், வீட்டுமனையின் விலை வீழ்ச்சி அடைந்துவிடும் என்று அஞ்சி, மயானத்துக்கு யாரும் நிலம் கொடுக்க முன்வரவில்லை.

இந்த நிலைமைதான் நடமாடும் மின் மயானம் பற்றிய சிந்தனையை எனக்கு ஏற்படுத்தியது.

20அடி நீளமுள்ள ஒரு சரக்குப் பெட்டக லொறியைத்தான் நடமாடும் மின்மயானமாக வடிவமைத்திருக்கிறேன்.இதில் ஒரு இன்சினரேடரும்,12.5 மீற்றர் உயரமுள்ள ஊதுலையும் இருக்கிறது. இறந்தவரின் உடலை தகன மேடையில் வைப்பதற்காக டிராலியும் உண்டு.

சடங்குகள் எல்லாம் செய்து முடித்த பிறகு உடல் டிராலி மூலம் தகன மேடையில்வைக்கப படும். தகனம் செய்வதற்கு பயன்படுத்துவதறகாக 8எல்பிஜி சிலிண்டர்கள் வைக்கப்பட்டுள்ளன.

எந்த இடத்துக்கு வேண்டுமானாலும, ஒருவரது வீட்டுக்கு முன்னால் கூட, இந்த நடமாடும் மின் மயான வாகனத்தைக் கொண்டு செல்லலாம்.

ஒருவரது உடலை தகனம் செய்ய 10 கிலோ எல்பிஜி காஸ் தேவைப்படும். ஒருதகனத்துக்கு அரை மணி நேரம் ஆகும். தகனம் முடிந்த உடனேயே ஆஸ்தியை சேகரித்துக்கொள்ளலாம். சுற்றுச் சூழல் மாசடையாமல் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தகனத்தின்போது ஏற்படும் வெப்பமும், புகையும், அவற்றில் உள்ள தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களையும் வாயுக்களையும் கிரகித்து கொள்ளும் வகையில், நீர்பாய்ச்சி குளிர்விக்கப்படும்.

இறுதிச் சடங்கு நடைபெறுவதை வெளியிலிருந்தபடியே பார்க்கும் வகையில் ஒளிபரப்பு வசதிகளும் இதில் செய்யப்பட்டுள்ளன.

இந்த நடமாடும் மின்மயானத்துக்கு காப்புரிமை பெறப்பட்டுள்ளது. ஒரு நடமாடும் மின் மயானத்தின் விலை ரூ.25இலட்சமாகும்.

மாசு கட்டுப்பாட்டு வாரியம் இத்திட்டத்துக்கு கொள்கையளவில் அனுமதி அளித்துள்ளது என்றார். (ற)

# இதுவன்றோ பெருந்தன்மை!

(சுவிஸ்)

சுவிறசாலாந்தில் பயணம் செய்யும இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் ஒரு ஆட்டோகிராபில் கையெழுத்திட்டபோது, சுவிற்சர்லாந்து அதிபர் 'சாமுவேல் சிமிட்' காட்டிய பெருந்தன்மை காண்போரை நெகிழச் செய்துள்ளது. அந்த சுவையான சம்பவம் வருமாறு.

சுவிற்சர்லாந்து நாட்டில் உள்ள 'இசல் வால்ட் டோர்ப்' எனும் இடத்திற்கு இந்திய ஜனாதிபதி கலாம்சென்றார். அவருடன் சுவிற்சர்லாநது அதிபர் சாமுவேல் சிமிட்டும் சென்றார். அப்போது இந்திய ஜனாதிபதியை காண்பதற்கு ஏராளமான சுவிஸ் குழந்தைகள் காத்திருந்தனர்.

ஒரு சுவிஸ் சிறுமி ஜனாதிபதி கலாமை அணுகி, தனது ஆட்டோகிராபில் கையெழுத்திடுமாறு தனது மழலைக் குரலில் கேட்டாள்.

ஆட்டோகிராப் புத்தகத்தை பெற்றுக் கொண்ட கலாம், அந்த புத்தகத்தை வைத்து எழுதுவதற்கு மேசை போன்ற ஏதாவது இருக்குமா என அங்குமிங்கும் தேடினார்.

இதை குறிப்பால் உணர்ந்த சுவிஸ் அதிபர் சாமுவேல் சிமிட், தனது முதுகை வளைத்து கொடுத்து அதில் ஆட்டோகிராப் புத்தகத்தை வைத்து கையெழுத்துப் போடும் படி கேட்டுக் கொண்டார். கலாமும் அப்படியே செய்தார். கலாமும், சுவிஸ் அதிபரும் குழந்தைகளுடன் குழந்தையாக இப்படி நடந்து கொண்டது காண்போரை நெகிழச் செய்தது.

அங்கே குழுமியிருந்த குழந்தைகளுக்கு ஒரு சிறிய ராஜ்தானி குடத்தில் கொண்டு வரப்பட்ட இனிப்பு வகைகளை கலாம் புன் சிரிப்புடன் வழங்கி மகிழ்ந்தார். (ற)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - குறள்

# வலம்புரி

## எரிபொருளின் விலையை மீண்டும் அதிகரிப்பதா?

நாளுக்குநாள், மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் எரிபொருளின் விலையை அதிகரிப்பது இலங்கை ஆட்சியாளர்களின் சாதாரண விடயமாகிவிட்டது.

மக்களின் அத்தியாவசியப் பொருளாகிய எரிபொருளின் விலையை அதிகரிப்பதன் மூலம், வாழ்க்கைச் செலவை உயர்த்தி மக்களின் நாளாந்த நுகர்வுக்குக் கேடு விளைவிப்பதே அரசின் திட்டமாகவுள்ளது.

எரிபொருளின் விலையை எல்லையற்ற முறையில் உயர்த்தலாம் என்பது அரசின் எண்ணமாகும். கடந்த 20 வருடகாலமாக யுத்தத்தை நடத்தி நாட்டை எரித்துச் சாம்பல்மேடாக்கிய சிங்கள ஆட்சியாளர்கள், இப்போது ஈவிரக்கமின்றி எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்தி வருகின்றனர்.

உலக நாடுகளிடம் கையேந்தி - கடன்பட்டு இனப்போர் புரிந்து நாட்டின் செல்வ வளத்தை எரியூட்டிய இலங்கை ஆட்சியாளர்கள் இப்போதுகூட, படுபாதாளத்திற்குள் அமிழ்ந்துபோகும் நாட்டை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. மாறாக மீண்டும் யுத்தம் என்பதையே அவர்கள் விரும்புகின்றனர்.

இதற்கு இலங்கை வாழ் மக்களின் ஒற்றுமையின்மையும், அடக்குமுறைகளைக் கண்டு கிளர்ந்தெழாத அவர்களின் சலிப்புத்தன்மையுமே காரணமாகும்.

உலக வரலாற்றில் அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரித்த அரசுகளை மக்கள் புரட்சி மூலம் கவிழ்த்ததாகவே வரலாறு உண்டு. குறிப்பாக நெகிழ்ச்சியற்ற பொருட்களென பொருளியலாளர்களால் அடையாளம் காணப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரிப்பது என்பது ஓர் நீதியான அரசின் பணியாக இருக்கமாட்டாது.

பொருட்களின் விலையை அதிகரித்து அதன் மூலம் செலவீனங்களை ஈடுசெய்யவேண்டிய தேவை ஏற்படின் மனித நுகர்வுக்குத் தீங்கான பண்டங்களுக்கு விலை அதிகரித்து, அதனை ஈடாக்கவேண்டும். இதைவிடுத்து மக்களின் அன்றாட தேவைகளுக்குப் பயன்படுகின்ற அத்தியாவசியமான எரிபொருட்களுக்கு விலையை அதிகரிப்பதென்பது சமூக நீதியைப் பேணவேண்டிய அரசின் கடமையாக இருக்க முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரை எரிபொருளின் இறக்குமதியை அரசு தனி உரிமையாக வைத்துள்ளது. இதற்குக் காரணம் அத்தியாவசியமான எரிபொருளின் இறக்குமதியை தனியாரிடம் வழங்கினால் தனியார் எரிபொருளின் விலையை அதிகரிப்பர். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவர் என்பதேயாகும்.

ஆனால் இப்போது பொதுமக்களைத் தனியார் துறையிடமிருந்து பாதுகாக்கவேண்டிய அரசே எரிபொருளின் விலையைக் கண்டபாட்டில் அதிகரித்து வருகின்றது. இதனால் போக்குவரத்துச் செலவு, உற்பத்திச் செலவு, சந்தைப்படுத்தல் என்ற ரீதியில் விலை அதிகரிப்பு நாடுபூராகப் பரந்து பொதுமக்களின் வாழ்க்கைச் செலவை அதிகரிக்கின்றது.

அதுமட்டுமன்றி எரிபொருளின் விலை அதிகரிப்பானது நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் பெரிதாகப் பாதித்துவிடும். அதேவேளை உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கவோ அன்றி புதிய முதலீடுகளை ஏற்படுத்தவோ எரிபொருளின் விலை அதிகரிப்பானது தடுத்துவிடும்.

எனவே எரிபொருளின் விலை அதிகரிப்பை அடிக்கடி ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைச் சுமைகளை உயர்த்துவதை நிறுத்த பொதுமக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் உறுப்பினர்கள் எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும்.

இதற்குமேலாக பொது அமைப்புக்களும், நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புக்களும் அரசியல் நோக்கற்ற பொதுநலனுடன் போராட்டங்களை நடத்தி எரிபொருளின் - அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பைத் தடுக்க முன்வரவேண்டும்.

# அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஆதரவளிக்க வேண்டும்

## -ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க



(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுக்கும முயற்சிகளுக்கு மக்கள் பூரண ஆதரவு அளிக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்ய ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கம மேறகொண்டு வரும முயற்சிகளை சர்வதேச சமூகமும் பாராட்டி வருகிறது என்றும் அவர் சுட்டிககாட்டினார்.

நிரந்தர சமாதானம் ஏற்படாவிட்டால் நாட்டை முனனேற்ற முடியாது மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்குடன் சில சக்திகள் இனரீதியாக வன்செயலைத் தூண்டி விடுவதற்கு முற்படுகின்றன.

இந்த நிலைமைகளுக்கு மத்தியில் மக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கினால் நாட்டில் நன்மைகளைக் கருததல் கொண்டு சரியான தீர்மானததை எடுத்துக்கொள்ள முடியுமென்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (ரு-5)

# யாழில் தொழில்சார் விபத்துக்களில் மாதாந்தம் சராசரி 15 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாக தொழில சார் விபத்துக்களால் பாதிக்கப்படும் தொழிலாளர்கள் மற்றும் உதவியாளர்களின் தொகை அதிகரித்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இந்த வகையில் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 15க்கும் மேற்பட்டோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதாக அறியப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்டட நிர்மாணப்பணிகள் அதிகரித்துள்ளமையினால் இவற்றில் வேலை செய்யும் மேசன்வேலை, தச்சுவேலை மற்றும் வர்ணம் பூசும் வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் தொழில் செய்யும போது விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இதுதவிர மாவட்டத்தில் இயங்குகின்ற அரிசி ஆலைகள, அரைக்கும் ஆலைகள், மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் இடங்கள் மற்றும் தச்சுத்தொழிலகங்கள் போன்றவற்றில் வேலை செய்வோர் அடிக்கடி விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இருப்பினும் இத்தகைய தொழிலகங்களில் முதலுதவிச சிகிச்சைகள் வழங்கக் கூடியவகையில் முதலுதவிப்பெட்டிகளோ அல்லது முதலுதவிச் சிகிச்சைகள் தெரிந்தவர்களோ இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ரு-16)

## பிரதமர் நம்பிக்கை

# தென்உலக மாநாடு சகலருக்கும் நன்மை

(கொழும்பு)

புத்தாயிரமாம் ஆண்டு மாற்றங்களுக்கு ஏற்றவிதத்தில் அரசாங்கங்களை தயார்ப்படுத்துவதற்கான தென் உலக மாநாடு அதன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தக்க தருணததில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவின் சியோல் நகரின் அமைப்பின் 6ஆவது மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் சுற்றாடல் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, எயிட்ஸ் போன்ற கொடிய நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உலக சமாதானம் ஆகியவற்றுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

3ஆவது மண்டல நாடுகளில் நவீன தேவைகளுக்கு எற்ற வகையில் அரசாங்கங்களை செயற்பட வைக்க வேண்டிய அவசியம் பற்றி பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கம் இதற்குத் தேவையான பல நிர்வாக மாற்றங்களை ஏற்கனவே இனம்கண்டுள்ளது. இவற்றின் நிர்வாகத்திலிருந்து அரசியலை நீக்குதல், அரசாங்க நிர்வாக அமைப்பை திறம்பட இயங்க வைக்க மறுசீரமைத்தல் ஆகியன இந்தத் திட்டத்தில் அடங்குகின்றது.

இந்த மாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானம் சர்வதேச சமூகத்தற்குப் பெரும் நன்மையளிக்குமென்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (அ-9)

# இடைத்தங்கல் முகாம்களில் குடியிருப்புக்கள் அமைக்கும் பணிகள் பூரணப்படுத்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென வடமராட்சி வடக்கில் 18 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்ட இடைத்தங்கல் முகாம்களில் குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் இன்னமும் பூரணப்படுத்தப்படாமையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலேயே வசித்து வருகின்றனர்.

பதினெட்டுக் கிராம சேவையாளர் பிரிவுகளில் மொத்தம் ஆயிரத்து 345 குடியிருப்புக்களை அமைப்பதற்கு ஐக்கிய நாடுகள சபையும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இணங்கியிருந்த போதிலும் கூட இதுவரை 837 குடியிருப்புக்கள் மட்டுமே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

பூர்த்தியாக்கப்பட்ட குடியிருப்புக்களில் 837 குடும்பங்கள தற்போது வாழ்ந்து வருகின்றன. ஆயினும் திட்டமிடப்பட்ட ஆயிரத்து 345 குடியிருப்புக்களில் இன்னமும் 508 குடியிருப்புக்கள் பூர்த்தியாக்கப்படாமல் இருப்பதால் குறித்த குடும்பங்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளன.

இதேசமயம் பூர்த்தியாக்கப்படாமல் இருக்கும் 508 குடியிருபபுககளை விரைவில் முடிக்கும்படி யாழ். அரசாங்க அதிபரும் மற்றும் சுனாமி செயலணிக் குழுவும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

இது இவ்விதமிருக்க சுனாமி புனர்வாழ்வுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகளில் மேலும் 525 குடியிருப்புக்கள் நிர்மாணிக்கப்பட வேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது

இவ்வகையில், கியூடெக்-109, சிறுவர் பாதுகாப்பு நிறுவனம்-188, லீட்டஸ் -102, போரூட் -88, சேவா லங்கா -27, யு.என்.எச்.சி. ஆர்-11 குடியிருப்புக்களை நிர்மாணிக்க இணங்கியுள்ளன.

இருந்தபோதும் இத்தகைய குடியிருப்புக்களை நிர்மாணிக்க உகந்த காணிகளைக் கண்டுபிடிப்பதும் காணிச் சொந்தக்காரர்களிடம் சம்மதம் பெறுவதும் மிகவும் பெரிய கஸ்டமான காரியமாகத் தெரிவதாக அரசசார்பற்ற நிறுவனமொன்றின் பணியாளா ஒருவர் தெரிவித்தார். (ரு-16)

## டீசலின் விலை அதிகரிப்பு;

# இலங்கை மின்சார சபைக்கு 45-47 மில்லியன் ரூபா நஷ்டம்

(கொழும்பு)

நுரைசசோலை அனல் மின் நிலையத்தைத் திட்டமிட்டது போன்று நிர்மாணிக்கத் தவறும் பட்சத்தில் இலங்கை மின்சார சபை மின்வெட்டு அமுல்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகுமென்று இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மின்சார பற்றாக்குறை ஏற்படுவது மட்டுமல்லாது நாட்டின பொருளாதாரமும் வீழ்ச்சியடையும் நிலைமை ஏற்படக் கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

டீசலின் விலை அதிகரித்துள்ள நிலையில் டீசலை உபயோகித்து ஏனைய மின் நிலையங்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் 45 முதல் 47 மில்லியன் ரூபா நஷ்டத்தை இலங்கை மின்சாரசபை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (ரு-9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

சிதறி ஓடும் மனதை இழுத்துப் பிடித்து மீண்டும் தியானப் பொருளின் மீது வலுக்கட்டாயமாக நிலை நிறுத்துவதும் அப்பியாசம் தான். உண்மையில் அது நமக்கும் மனதிற்குமிடையே நடக்கும் ஒரு பெரிய போராட்டம் என்றே சொல்ல வேண்டும். குறிப்பிட்ட நேரங்களில் தியானம் செய்வது, அலைபாயும் மனதை இறைவன் மீது நிலைநிறுத்துவது ஆகிய இரண்டும் அப்பியாசமாகும்.

சுவாமி விவேகானந்தர்

# யுத்தத்தை ஆரம்பிக்கும் நோக்கம் எமக்கில்லை ஆனால் ஆரம்பிக்கப்பட்டால் அதற்கும் தயார்

## யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற விடுதலைப்போராட்டம் தமிழ்த்தேசியம் எனும் தளத்தில் இருந்து நடாத்தப்பட்டு வருகின்றது. எனவே இந்த விடுதலைப்போராட்டம் வெற்றிபெற்றே தீரும் என்பதை நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி மந்துவில் மேற்கில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிக்கொட் வீட்டுத்திட்ட வீடுகள் கையளிப்பு வைபவத்தில் பங்குகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் க.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மௌலவி எஸ்.சுபியான், வணபிதா. ஆர்.கருணாரத்தினம் அடிகள் ஆகியோர் ஆசிஉரைகளை வழங்கினர்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பாராளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜ், நிக்கொட் திட்டப்பிரதிப் பணிப்பாளர் எஸ்.நவரத்தினராசா, அறவழித் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் உட்பட வேறும்பலர் பங்குகொண்ட இந்நிகழ்வில் அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி தொடர்ந்து உரையாற்றும் பொழுது,

எங்களுடைய மக்களின் சிரிப்பு, மகிழ்ச்சி, நிம்மதிதான் முக்கியமாகும். எமதுமக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காகவே நாம் இந்தப்போராட்டத்தை நடத்திவருகின்றோம். ஒரு தேசியஇனத்தை இன்னொரு தேசிய இனம் தொடர்ந்தும் அடக்கி ஒடுக்கி வைத்திருக்க முடியாது. நாம் மிகவிரைவில் விடுதலைபெற்ற இனமாக இந்த உலகில் திகழ்வோம்.

எமது இயக்கமானது மக்களுக்காகப் பாடுபடுகின்ற இயக்கமாகும் எமது மக்கள் சுபீட்சகரமான வாழ்வுக்குள் விரைவில் பிரவேசிப்பார்கள் என் நான் உறுதியாக நம்புகின்றேன். எமது மக்கள் தமது மனங்களை நல்ல வழியில் ஆற்றுப்படுத்தி மனக்கோட்டைகளை கட்டியெழுப்பவேண்டும்.

இது வரைகாலமும் நாம் கட்டிய மனக்கோட்டைகள் இடிந்துபோனமைதான் வரலாறு. ஆனால் இனி நாம் கட்டவுள்ள மனக்கோட்டை அப்படியானதல்ல. எமது தேசம் விடுதலைபெறும்போது இங்குவாழ்கின்ற எல்லோரும் எல்லாமும் பெற்றுவாழ்வார்கள்.

நாம் உலகில் முன்னணியில் நிற்கின்ற நிலை விரைவில் உருவாகும். எனவே நாம் மெதுவாக மனவளத்தினை பலப்படுத்த வேண்டும். மக்கள் சக்திதான் மாபெரும் சக்தியாகும். மக்கள் தமது சக்தியை வளப்படுத்த வேண்டும். நாம் சிறுவர்களை படையில் சேர்க்கவில்லை அவர்களாகவே எம்மை நாடி வருகின்றனர் இதனை யுனிசெப் போன்ற அமைப்புகள் புரிந்துகொள்ளவேண்டும்.

எமக்கென்று ஒரு நாடுவந்துவிட்டால் எல்லோருக்கும் கல்விகிடைக்கும். சுகாதார வசதிகள் கிடைக்கும். தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கும்.எனவே எமக்கென்று ஒரு நாட்டை உருவாக்க அனைவரும் எம்முடன் இணைந்து செயற்படவேண்டும்.

நாட்டில் யுத்தத்தினை ஆரம்பிக்கும் நோக்கம் எமக்கில்லை.நாமாக யுத்தத்தை தொடங்க மாட்டோம். தொடங்கினால் விடமாட்டோம். இப்போதும் நாம் எல்லோரும் இராணுவவலைக்குள்தான் இருக்கின்றோம் எமது படையின் பலம் பெருகும்போது இங்கு ஆக்கிரமித்த நிலையில் இருக்கும் படையினர் தாமாகவே எமது தாயகத்தினை விட்டு ஓடிவிடுவார்கள் என்றார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜ் இங்கு உரையாற்றும் பொழுது, தமிழ்பேசும் மக்கள் நிவாரணத்தை நம்பிவாழ்கின்ற இனமல்ல தமிழ் மக்கள் தமது சொந்தக்காலில் நிற்க வேண்டும். தொடர்ந்தும் கையேந்தி நிற்காது, தமது சொந்தப்பலத்தில் வாழவேண்டும்.

இன்றைய நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த யாழ்.மாவட்ட அமைப்பாளர் மௌலவி சுபியான் பங்கு கொண்டிருப்பது நல்ல அம்சமாகும்.

யாழ்ப்பாணத்து முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு நாம்தயாராக இருக்கின்றோம்.அவர்களுக்கு ஆதரவாக இருப்பதற்கு என்றுமே ஆயத்தமாகவுள்ளோம்.

அதேபோலவே தமிழீழ விடுதலைப்புலிகளும் இவர்கள் விடயத்தில் ஆர்வம்கொண்டுள்ளனர். ஆயினும் ஒருசில விசமிகள் எம்மை முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்கள் என பிரசாரம் செய்துவருகின்றனர். எமக்குள் ஏற்பட்ட காயத்தை மாற்றுவதற்கு நாம் இன்றும் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சேர்ந்து வாழ்வதுதான் வாழ்கையாகும். பேரினவாதிக்ள் பேரினவாதிகள்தான். பேரினவாதிகள் இந்தநாட்டை சிங்கள பௌத்த நாடாக மாற்றுவதற்கு முயற்சி செய்துவருகின்றனர். எனவே நாம் எமக்குள் இணைந்த நிர்வாகத்தை ஏற்படுத்தி எங்கள் மண்ணையும் மொழியையும் இனத்தையும் பாதுகாக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் வீடுகளை பெற்றுக்கொண்ட 120 பேருக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ற-16)

## ஆங்கிலமொழித் தரத்தை உயர்த்த வைத்தீஸ்வராக் கல்லூரியில் வெளிச்சவீட்டுப் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய மாணவர்களின் ஆங்கில மொழித்தரத்தை உயர்த்துவதற்காக வெளிச்சவீட்டுப் பாடசாலை (Light House School) ஆங்கிலப் பிரிவொன்று வைத்தீஸ்வராக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டத்தைப்பற்றி பெற்றோரும் பொதுமக்களும் அறிந்துகொள்வதற்காக யாழ்.வலயப் பெற்றோருக்கான தொடர் பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன.

யாழ். கோட்டக் கல்விப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைப் பெற்றோருக்கான பயிலரங்கொன்று நாளை முதலாம் திகதி புதன்கிழமை காலை 9.30 தொடக்கம் 11.30 வரை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, விவேகானந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஐந்து பெற்றோர் இப்பயிலரங்குக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இப்பயிலரங்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நடைபெறுமெனவும், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் தெரிவித்துள்ளார். (ற)

## எஸ்.பிக்கு மன்னிப்பு...

தனதுசட்டவல்லுநர்களுடன் ஆராயவேண்டியுள்ளதாகவும், இதனால் இந்த விவகாரம் குறித்து முடிவுசெய்ய தனக்குக் கால அவகாசம் தேவைப்படுவதாகவும் ஜனாதிபதி மிலிந்த மொறகொடவிடம் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் அரசியலமைப்புக்கு அமைய ஜனாதிபதிக்கே இருப்பதனால், எஸ்.பி.திசநாயக்கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளிக்க வேண்டுமென்றும், திசநாயக்காவிற்கு விதிக்கப்பட்ட தண்டனை காலத்தில் ஒரு குறிப்பிட்டகால தண்டனையை ஏற்கனவே அவர் அனுபவித்திருப்பதாகவும் மிலிந்த மொறகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் சமுகமளித்திருந்தார். (ந)


வேலையாட்கள் தேவை

எமது ஜவுளி நிறுவனத்துக்கு O/L, A/L படித்த விற்பனையாளர்கள் (ஆண்கள்) தேவை. அனுபவமுள்ளவர்களும் பழக விருப்ப மானவர்களும் தொடர்பு கொள்ளவும்.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரிய கடை யாழ்ப்பாணம் (C-1416)


## பொதுக்கட்டமைப்பு...

ளுடன் சேர்ந்து பணியாற்றக் கூடியவகையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் பொதுக்கட்டமைப்பாகும்.ஆனால் இரண்டாவது கட்டமைப்பை நாம் ஏற்கமாட்டோம். எமது எதிர்ப்பைப் பொருட்படுத்தாது கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமானால் கூட்டமைப்பை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து தீர்மானிக்க வேண்டிவரும் எனவும் அவர் தெரிவித்தார்.

## அரசாங்க...

கொள்வதற்கு கடனைப் பெறமுடியும். இதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

ஐந்துவருட கால சம்பளத் தொகை அல்லது 20 லட்சம் ரூபாவில் எது குறைந்ததோ அத்தொகை கடனாக வழங்கப்படுமெனவும், இதற்கு 4 சதவீத குறைந்த வட்டியே அறவிடப்படுமெனவும், அவ்வாறான குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படும் முதற் சந்தர்ப்பமும் இதுவே என்று அவர் தெரிவித்தார். (ந-4)

## சுனந்த தேசப்பிரிய...

அட்டாளைச்சேனையிலுள்ள காதலியின் வீட்டிற்கு குருநாகலிலிருந்து அம்பாறை-கல்முனை வீதியூடாக வாகனத்தில் சென்றுகொண்டிருந்த சமயம் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தின்போது வாகனம் மரம் ஒன்றுடன் மோதியதில் அதில் பயணம் செய்த அவரது நண்பரான முஹமட் பவாஸ் (வயது 23) என்பவர் காயங்களுக்குள்ளாகி சம்மாந்துறை வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாகனத்தை செலுத்திச்சென்ற இந்த நபர்மீது கழுத்தில் துப்பாக்கி ரவைகள் பாய்ந்துள்ளன. ரி-56 ரகத் துப்பாக்கியே இவர் மீதான தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபர்கள் இதுவரை கண்டறியப்படவில்லை என்று சம்மாந்துறை பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

## வரவேற்பு வளைவ நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.செம்மணிச் சந்தியில் உள்ள 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' நுழைவாயில் வளைவு மீள் திறப்புவிழா நாளை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா இதனை வைபவ ரீதியாக திறந்து வைப்பார்.

## வாகரையில் இன்று பேரணி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப்பிரதேசத்தில் எதிர்ப்புப் பேரணி ஒன்று இன்று காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்திற்குட்பட்ட கோரளைப்பற்று வடக்குப் பகுதிக்கு எரிபொருள் மற்றும் கட்டட நிர்மாணப்பொருட்களை எடுத்துச் செல்வதற்கு இராணுவத்தினரால் விதிக்கப்பட்ட தடையினைக் கண்டித்தே இப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ந-4)

## பொதுக்கட்டமைப்புக்குள்...

சன்துறைத்துறைமுகம் உட்பட வடக்கு கிழக்கில் உள்ள கடற்படை முகாம்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட அனுமதிக்கக் கூடாது என படைத்தளபதிகள் ஜனாதிபதியினை கேட்டதற்கமையவே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியிருப்பதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இதேவேளை முப்படைத்தளபதிகளின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட மேற்படி முடிபுகளை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்வார்களா? என்பதை பொறுத்துத்தான் பார்க்கவேண்டும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-4)

## ரூ. 5 கோடி...

மதியான திட்டங்களை 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்காக யாழ். மாவட்ட அரச அதிபரிடம் சமர்ப்பித்தனர். பத்து பாராளுமன்ற உறுப்பினர்களாலும் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 5 கோடி பெறுமதியான திட்டங்கள் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதுடன், யாழ். மாவட்டதின் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (ற-1





நாதன்ஸ் சினிமா

அறிந்தும் அறியாமல

கா.நே: 10.30,2.30,6.30,9.0(பு




திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு

★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)

★ விசேட வைபவங்கள்

★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்

சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467


## அன்பு வாசகர்களே!

நயினாதீவு நாகபூசணிஅம்பாளின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வலம்புரியில் இம்முறையும்

'நயினைநாகபூசணிஅம்மன்பாமாலை'

வெளிவரும் நயினை அம்மனைத் துதிசெய்யும் உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி,

'நயினை நாகபூசணி அம்மன் பாமாலை'

வலம்புரி

இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2005 இல் அச்சிட்டு வெளியி